பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 09 திங்கட்கிழமை (21.04.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 147

## வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர்

# கருணாரட்ணம் அடிகளார் கிளைமோர்த் தாக்குதலில் பலி!

### மல்லாவி - மாங்குளம் வீதியில் சம்பவம்

கொழும்பு, ஏப்ரல் 21

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் அருட்திரு கருணாரட்ணம் அடிகளார் நேற்றுப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மல்லாவியில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

கருணாரட்ணம் அடிகளார் பயணம் செய்த வாகனம் மல்லாவி - மாங்குளம் வீதியிலுள்ள குழந்தை இயேசு கோவிலுக்குச் சமீபமாக கிளைமோர்த் தாக்குதலுக்கு உள்ளானது என விடுதலைப் புலிகளின் காவல்துறையினர் தெரிவித்தனர்.

மாங்குளத்தில் வழிபாட்டினை முடித்து விட்டு மல்லாவி வன்னிவிளாங்குளத்தில் உள்ள தனது பங்குக் கோவிலுக்கு வெள்ளை நிற 'பிக்கப்' ஊர்தியில் திரும்பிக்கொண்டிருந்தபோது, வன்னிவிளாங்குளம் வீதியில் உள்ள அம்பாள்குளம் குழந்தை யேசு கோவிலடியில் இக் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது. இச்சம்பவம் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் நடைபெற்றிருக்கிறது.



அடிகளார் பயணம் செய்த வாகனம் பழுதடைந்தது என்றும் கட்டி இழுத்து வரப்பட்ட வாகனத்தில் அவர் இருந்த வேளையே வாகனம் கிளைமோர்த் தாக்குதலுக்கு உள்ளானது ன்றும் தெரிவிக்கப் படுகிறது.

இந்தத் தாக்குதலில் கருணாரட்ணம் அடிகளார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கருணாரட்ணம் அடிகளார் குறிப்பிட்ட பாதையில் வழமையாகப் பயணிப்பவர் எனவும் - அவரது உளவளத்துணை நிலையம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீது தடை விதிக்க கனடாவில் எழுந்துள்ளது கோரிக்கை

கொழும்பு, ஏப். 21

இலங்கையில் மனித உரிமை நிலைவரம் மோசமடைந்துள்ளதால் இலங்கை மீது தடைகளை விதிக்க வேண்டும் என்று கனடாவின் கொன்சவேர்ட்டிவ் கட்சியின் நிதி திரட்டும் நிகழ்வில் வெளியிடப்பட்ட அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்ராரியோவின் வழக்கறிஞர்களும், இலங்கையர்கள் சிலரும் இணைந்து தயாரித்துள்ள இந்த அறிக்கையில், இலங்கையில் சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சிஅடைந்து வருவதாகவும் -

அரச ஆதரவுடன் ஆள்கடத்தல்கள் அதிகரித்து வருகின்றன என்றும் - தெரிவிக்கப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியே அடிகளாரை இலக்கு வைத்துக் கொன்றது

### புலிகளின் இராணுவப் பேச்சாளர் சொல்கிறார்

கொழும்பு, ஏப். 21

வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் பணிப்பாளர் அருட்தந்தை எம்.எக்ஸ்.கருணாரட்ணம் அடிகளாரை, இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணியே கிளைமோர் வைத்துக் கொலை செய்தது - என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்திருக்கிறார்.

சர்வதேச செய்தி நிறுவனமான 'ரொய்ட்டர்ஸின்' கேள்விக்கு ஈமெயில் மூலம் பதிலளித்தே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைக்கான கப்பல்சேவை இன்று

யாழ்ப்பாணம், ஏப். 21

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறும் என யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் நேற்றிரவு தெரிவித்தது.

இன்று முதல் கப்பல் சேவை வழமை போல் இடம்பெறும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (1)

## ஜனாதிபதி மற்றும் இரு சகோதரர்கள் மீது சர்வதேச நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கு?

### மிலோசெவிக் பாணியில் அமையும் எனத் தகவல்

நியூயோர்க், ஏப். 21

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ மற்றும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகிய நால்வர் மீதும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தொடங்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

யூகோஸ்லோவியாவின் முன்னாள் அரச தலைவர் ஸ்லோபோடன் மிலோசவிக்குக்கு எதிராக தயாரிக்கப்பட்ட குற்றச்சாட்டு அறிக்கையைப் போன்று இவர்கள் நால்வருக்கும் எதிரான குற்றப்பத்திரிகை அமெரிக்க சட்டத்தரணி புரூஸ் பெய்ன் தயாரித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நளினியின் மகள் ஒஸ்லோவிலா? லண்டனிலா? 'றோ' புலனாய்வுத்துறை குழம்பி நிற்கிறது!

புதுடில்லி, ஏப்..21

• ராஜீவ்காந்தி கொலை வழக்கில் முக்கிய குற்றவாளியெனக் கருதப்படும் நளினியின் மகள் மேஹரா எங்கிருக்கின்றார் என்பது குறித்து இந்தியப் புலனாய்வு அதிகாரிகள் மத்தியில் பெரும் குழப்பம் நிலவுகின்றது.

பிரியங்கா - நளினி சந்திப்புக்குப் பின்னரே இந்தியப் புலனாய்பு அமைப்புகள் மேஹரா குறித்துக் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன.

நளினியின் மகள் நான்கு மாதத்துக்கு முன்னர் நோர்வேயில் காணப்பட்டார் என்றும் அதன் பின்னர் அவர் எங்கிருக்கின்றார் என்பது தெரியவில்லை என்றும் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி இந்திய இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேஹரா லண்டனில் இல்லை. அவர் தற்போது தலைமறைவாகிவிட்டார். அவரைக் கண்டுபிடிக்க முயல்கின்றோம் என

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரிசிக் கடைகளுக்கு இன்று ஐ.தே.கவினர்

கொழும்பு, ஏப். 21

அரிசிக்கு அரசு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்ததைத் தொடர்ந்து அரிசி தொடர்பாக ஏற்பட்டிருக்கும் உண்மை நிலையைக் கண்டறிவதற்காக ஐக்கிய தேசியக் கட்சி இன்று கொழும்பில் கடைகடையாக ஏறிஇறங்கவுள்ளது.

அரிசி தொடர்பான உண்மை நிலையை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிராம சேவையாளர் தம்பதியினர் வீட்டில் வைத்துச் சுட்டுக்கொலை

### பாண்டிருப்பில் நேற்று மாலை சம்பவம்

மட்டக்களப்பு, ஏப். 21

அம்பாறை மாவட்டம், பாண்டிருப்பில் நேற்று மாலை கிராமசேவை உத்தியோகத்தர்களான கணவனும் மனைவியும் அடையாளம் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று கல்முனைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து மேலும் தெரியவருப்பவை வருமாறு-

கந்தையா நாகராசா மற்றும் அவரது மனைவி ஆனந்தி ஆகியோரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என அடையாளங்காணப்பட்டுள்ளது. கிராமசேவை உத்தியோகத்தர்களான இவர்கள் தமது வீட்டிலிருந்தவேளை மோட்டார் சைக்கிளில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான இஸ்ரேலின் ஆயுத விற்பனை நிறுத்தம்

### ஈரானுடனான உறவை வெட்டினாலேயே இனிக் கிடைக்கும்

கொழும்பு, ஏப் .21

இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்யப்போவதில்லை என்று இஸ்ரேல் திட்டவட்டமாக அறிவித்து விட்டது. ஈரானுடன் இலங்கை கொண்டுள்ள நெருங்கிய உறவே இஸ்ரேலின் இந்த நிலைப்பாட்டுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கினால் தனது ஆயுத தொழில்நுட்பங்களை இலங்கையூடாகத் தனது எதிரி நாடான ஈரான் அறிந்து கொள்ளலாம் என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் எகுட் பாராக் அச்சம் வெளியிட்டுள்ளார்.

இலங்கைப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க சமீபத்தில் இஸ்ரேல் சென்றபோது இஸ்ரேலிடமிருந்து ஆயுத உதவி கோரி இருந்தார். அப்பொழுதே இஸ்ரேலின் நிலைப்பாடு

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த நாளிதழ்



மன்னார் மடுவை அமைதிப் பிரதேசமாக்கி அன்னை மடுத்தேவாலத்திலேயே அமையப்பெற இரு தரப்பும் முன்வர வேண்டும் எனக் கோரி பருத்தித்துறை பங்கு மக்கள் செபமாலைப் பேரணி ஒன்றை நடத்தினர். தும்பளை லூர்த்து மாதா தேவாலயத்துக்கு பங்குமக்கள் பங்குதந்தை பேனாட் றெக்னோ அடிகளார் தலைமையில் செபமாலைப் பேரணியாகச் செல்வதை படங்களில் காணலாம். (218)

# பிரியங்கா நளினியைச் சந்தித்தது குறித்து ராஜீவுடன் உயிரிழந்தோரின் உறவினர்கள் பெரும் விசனத்தில்..!

சென்னை, ஏப்ரல் 21

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற நளினியை சந்தித்த ராஜீவின் மகள் பிரியங்கா, தங்களை சந்திக்காதது ஏன் என்று குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் வாரிசுகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ராஜீவ் காந்தியை கொலை செய்தவர்களுக்கு ஒரு போதும் மன்னிப்பு அளிக்கக் கூடாது என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர் என்று செய்தி வெளியாகியுள்ளது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் நளினி மற்றும் அவரது கணவன் முருகன் உள்ளிட்டோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் நளினியின் மரண தண்டனை மட்டும் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப் பட்டது.

இந்த நிலையில் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப் பட்டுள்ள நளினியை ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா வதேரா சமீபத்தில் சந்தித்துப் பேசினார்.

பிரியங்காவின் இந்தச் செயல் பலருக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ள நிலையில், இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் வாரிசுகள் மற்றும் பாதிக்கப் பட்டவர்கள் பிரியங்காவுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்றும் -

கொலைக்கு சதித்திட்டம் தீட்டி தண்டனை அனுபவித்து வரும் நளினியை சந்தித்த பிரியங்கா பாதிக்கப்பட்ட தங்களை இதுவரை வந்து சந்திக்காதது ஏன் என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

செங்கை மேற்கு காவற்துறை கண்காணிப்பாளராக இருந்த முகம்மது இக்பால், ராஜீவ் காந்தியை கொல்ல வைக்கப்பட்ட வெடி குண்டில் சிக்கி உயிரிந்தார்.

### மன்னிப்பு அளிக்கக் கூடாது

அவரது மனைவி நசீம் மற்றும் மகன் ஜாவித் இக்பால் ஆகியோர் ராஜீவ் கொலைக் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு அளிக்கக் கூடாது என்று கூறியுள்ளனர். இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கு காரணமானவர்களை மன்னிக்கும் பேச்சுகே இடமில்லை என்று நசீம் பானு கூறியுள்ளார். அவரது கருத்தையே பாதிக்கப்பட்ட பலரும் தெரி வித்துள்ளனர்.

இந்தக் குண்டுவெடிப்பில் உயிரிழந்த லீக் முனுசாமி என்ற காங்கிரஸ் பிரமுகரின் மகன் லீக் மோகன், நளினிக்குப் பெண் குழந்தை உள்ளது என் பதால் அவருக்கு மன்னிப்பு அளிக்க வேண் டும் என்ற வாதத்தை ஏற்கமுடியாது என்றும், இந்தக் குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்டவர் கள் மற்றும் உயிரிழந்தவர்களுக்கும் குழந் தைகள் உள்ளனர் என்றும் கூறியுள்ளார்.

நளினிக்கு மன்னிப்பு அளிக்கவே கூடாது என்று கூறும் மோகன், இது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமுக்கு தாம் கடிதம் எழுதியுள்ளார் எனவும் தெரி வித்துள்ளார். இந்த விபத்தில் காயம டைந்து 70 இற்கும் மேற்பட்ட குண்டு துகள்களுடன் போராடிக் கொண்டிருக்கும் பார்த்தசாரதி, தனது மருத்துவ செலவை தாமே மேற்கொண்டார் எனவும், சொந்தச் செலவில் நீதிமன்றத்திற்கு சென்று சாட்சியமளித்துள்ளார் என்றும் -

ஆனால் காங்கிரஸ் கட்சியிலிருந்தோ, காந்தி குடும்பத்திலிருந்தோ தங்களுக்கு எந்த உதவியும் அளிக்கப்படவில்லை என்றும், யாரும் தங்களை வந்து பார்க்கக் கூட இல்லை என்றும் ஆதங்கப்பட்டார் என்றும் -

என்ன நடந்தது என்று பிரியங்கா ஏன் நளினியிடம் போய் கேட்கவேண்டும்? எங்களிடம் வந்து கேட்கட்டும் என்றும் - நளினி மீது தமக்கு எந்த வெறுப்பும் இல்லை என்றும் ஆனாலும், பலரது குடும்பங் களை பாதிக்கச் செய்த நபரை மன்னிக்கவே கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

யார் மீதும் தங்களுக்கு எந்தக் கோபமும் இல்லை என்ற போதிலும், நளினியை பிரி யங்கா சந்தித்த செய்தியை படித்தபோது தங்களது மனம் புண்பட்டதாகவும் அவர் கள் தெரிவித்துள்ளனர் - என்றுள்ளது.

## சமய சந்நிதியில்

வலிதென் மேற்கு, ஏப் 21

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலய தீர்த்த உற்சவம் இன்று திங்கட் கிழமை மு.ப. 10.30 மணிக்கு நடைபெற உள்ளது. (1-135)

* * *

ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கும் புங்குடு தீவு பாணா விடை சிவன் கோவில் பெருந் திருவிழா இன்று திங்கள் காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பித்து தொடர்ந்து 11 நாள்க்கள் நடைபெறும்.

அனைத்து விழா நாள்களிலும் அன்ன தானம் வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. (1-302)

## உலக புவி தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப் 21

உலக புவி தினத்தை ஒட்டி நல்லூர் பிரதேச செயலகத்தின் ஏற் பாட்டில் முகாமைத்துவ ஆய்வுப் பட்டறை நாளை செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக் கு நல்லூர் பிரதேசசபை உப அலுவலகத்தில் இடம் பெற வுள்ளது.

பிரதேச செயலர் பா.செந்தில்நாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். மேல திக அரச அதிபர் ஆ.சிவசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (01)

## மரண அறிவித்தல்கள்



### முருகன் சுந்தரலிங்கம் (சோதி)

(40-1688 கமல் லொறி சாரதி)

கோப்பாய் மத்தி, அல்லியாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் சுந்தரலிங்கம் 19.04.2008 சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் சறோயினிதேவியின் அன்புக் கணவரும் ரஜினி, ராஜினி, சுதர்சன் (சுதன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2008) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இளங்காட்டு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மாசுவன் சந்தி,*
*நீர்வேலி மேற்கு,*
*நீர்வேலி.*

தகவல்:
ச.தவராசா (சிங்கம்)
(40-1688 கமல் லொறி உரிமையாளர்)

### அருட் திரு எம்.சேவியர் கருணாரட்ணம் (கிளி)

யாழ்.மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு எம்.சேவியர் கருணாரட்ணம் நேற்று (20.04.2008) ஞாயிற்றுக்கிழமை வவுனிக்குளத்தில் அகாலமரணமடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் இறை மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.அன்னாரின் நல்லடக்கம்பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அருட்திரு பஸ்ரின் ஞானப்பிரகாசம்
குருமுதல்வர்

உதயன் - கொழும்பு

அன்பான வாடிக்கையாளர்களே!
விளம்பரப் பணிமனை தற்பொழுது
வெள்ளவத்தை ஹம்டன் லேனில்
ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்

உதயன் கொழும்பு
83-D, ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.
தொ.பே.:2366042

Uthayan Colombo
83-D, Hampden Lane,
Wellawatte.
Tel:2366042.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவின் கரைப்பிரதேசம் கடல் அரிப்பினால் வேகமாக அமிழ்ந்து சென்றுகொண்டிருக்கும் அபாயம்

## அபிவிருத்தி நடவடிக்கை குறித்து விசேட குழு மதிப்பீடு

யாழ்ப்பாணம், ஏப்.21

நயினாதீவுக் கடற்கரைப் பிரதேசம் கடல் அரிப்பினால் தினமும் கடலுக்குள் அமிழ்ந்து சென்றுகொண்டிருக்கின்றது. இதன் அபாய நிலையைக் கருத்தில் கொண்டும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தன் அவசியம் கருதியும் ஐ.நா. திட்ட செயற்படுத்துகை அதிகாரிகள் குழு பிரதேசத்தை நேரில் சென்று பார்வையிட்டு மதிப்பீடு செய்துள்ளது.

வெளிக்கள இணைப்பாளர் போல் கிறைசன், எந்திரி எஸ்.தர்மரட்ணம், தொழில்நுட்ப அதிகாரி எஸ்.மைக்கல் ஆகியோர் அடங்கிய ஐ.நா.திட்ட செயற்படுத்துகைக் குழுவே பாதிப்புக்குள்ளாகிவரும் பிரதேசத்தை நேரில் சென்று மதிப்பீடு செய்துள்ளது.

வேலணை பிரதேச சபைச் செயலாளர் கை.மகேந்திரலிங்கம் அபாய நிலை குறித்து விரிவாக விளக்கினார்.

நயினாதீவின் கரைப்பிரதேசம் கடல் அரிப்பினால் தினமும் கடலுக்குள் அமிழ்ந்து செல்கின்றது. இத் திட்டத்தை நிறைவேற்ற அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என செயலர் அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து அக்குழு கடலரிப்பினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பார்வையிட்டு நான்கு கட்டமாக அறிக்கை செய்துள்ளது.

நயினாதீவுப் பிரதேசம் மூன்று மைல் நீளமும் இரண்டு மைல் அகலமும் கொண்ட பிரதேசமாகும். இங்கு 4 ஆயிரத்து 127 பேர் வசிக்கின்றனர்.

இப் பிரதேசம் உவர் நீரினால் அரிப்புக்குள்ளாகி அழிவடைந்து செல்கின்றது எனவும் அபிவிருத்தித் திட்டத்தை உடன் நிறைவேற்ற வேண்டும் எனவும் யாழ். அரச அதிபர் கே.கணேஷ், ஐ.நா.திட்ட செற்படுத்துகை வெளிக்கள இணைப்பாளரைக் கடிதம் மூலம் கோரியிருந்தார்.

அதனை அடுத்தே நயினாதீவுப் பிரதேசத்தை மேற்படி குழு பார்வையிட்டுச் சென்றுள்ளதுடன் அபிவிருத்திப் பணிகளும் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-95)

# ஊழியர் சேமலாப நிதி சிரமமின்றிக் கிடைக்க திணைக்களம் ஏற்பாடு

ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக் கொள்ள முடியாது சிரமப்பட்ட சுமார் 60 பேருக்கு அது தாமதமின்றிக் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை யாழ்.பிராந்திய தொழில் திணைக்களம் செய்து கொடுத்துள்ளது.

இந்த நிதியைப் பெறமுடியாது சிரமப்பட்டு வந்தோர்ரின் நலன் கருதி யாழ். தொழில் திணைக்களம் நடத்திய விசேட செயற்பாட்டின் மூலம் நிதியைப் பெறத் தகுதியானோரின் விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்கள் ஆராயப்பட்டு அவை தொடர்பான முழுமையான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து சுமார் 60 பேருக்கு ஊழியர் சேமலாப நிதி தாமதமின்றிக் கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது.

தொழில் திணைக்களத்தின் இந்த நடவடிக்கையை அடுத்து ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக்கொள்ள பெரிதும் உதவியாக இருந்தது என பாதிக்கப்பட்டோர் தெரிவித்தனர். (202-236)

## தென்மராட்சிப் பிரதேச முதியவர்களுக்கு

# திணைக்கள சேவைகளில் முன்னுரிமை வழங்குமாறு செயலர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்.21

தென்மராட்சி பிரதேச முதியோர்களைக் கௌரவிக்கும் வகையில் அவர்களுக்கு திணைக்கள சேவைகளில் முன்னுரிமை வழங்குமாறு திணைக்களத் தலைவர்களை பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார்.

பிரதேச முதியோர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு வருவதாவும், முதியோர் அடையாள அட்டையுடன் வருபவர்களுக்கு முன்னுரிமை கொடுக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

பிரதேசத்தில் உள்ள வங்கிகள், மருத்துவமனைகள், கூட்டுறவுச் சங்கங்கள், போக்குவரத்துச் சங்கங்கள், பிரதேச செயலக பிரிவுகள் ஆகியவற்றுக்கு இது தொடர்பாக பிரதேச செயலர்அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

# குறிகாட்டுவான் இறங்குதுறையின் புனரமைப்புப் பணிகளை விரைவில் முன்னெடுக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.21

கடலின் அடியில் அமிழ்ந்து போகும் நிலையிலுள்ள குறிகாட்டுவான் இறங்குதுறையைப் புனரமைக்கும் பணிகளை விரைவில் முன்னெடுக்கும் ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் எந்திரி வி.சுதாகர் இவ்விடயம் தொடர்பாக வேலணைப் பிரதேச சபைச் செயலர் கை. மகேந்திரலிங்கத்திற்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நயினாதீவு இறங்குதுறை, வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமானது. குறிகாட்டுவான் இறங்குதுறை மட்டுமே வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது. எனவே குறிகாட்டுவான் இறங்குதுறையைப் புனரமைக்கும் சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சிமெந்து விலை அதிகரித்துள்ளமை குறித்து சபைத் தலைவருக்கு அறிவித்துள்ளோம். எனவே அதற்கேற்ற பதில் தலைவரிடமிருந்து கிடைத்ததும் வேலை ஆரம்பிக்கப்படும் - என்றுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவர் பி.கே.பரமலிங்கம், வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், நயினாதீவு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி மகேஸ்வரன் சத்தியேஸ்வரி ஆகியோருக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம பொறியியலாளரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (202-95)

# ஊர்காவற்றுறை உ.அ.அ. பிரிவின் கலை, இலக்கிய போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.21

தேசிய கலை இலக்கிய பெருவிழாவை முன்னிட்டு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:

கட்டுரை

*கனிஸ்ட பிரிவு:* ச.மதுசா(கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.), ஜே.டிலக்ஷன் (நாரந்தனை றோ.க.த.க.ம.வி.), ஞா.யூடிற் ஷியானா (கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.)

*சிரேஷ்ட பிரிவு:* அ.ரமா (கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.), பு.சிந்துஜா (கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.), யே. நிர்ஷாந்தி (கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.),

சிறுகதை

*கனிஷ்ட பிரிவு:* ஸ்ரீ.சிந்துஜா (கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.), மு.நிலானி (கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.), ம.ஆனல்ட் சரண்ஷன் (புனித அந்தோனியார் கல்லூரி),

*சிரேஷ்ட பிரிவு:* றொ.மரீனா மியூறின் (கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.), யே. வெரோணிக்கா(புனித மரியாள் றோ.க. ம.வி.), ஜே.மரீனா ஜெசிந்தினி (கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.)

*திறந்த பிரிவு:* சி.பிரியதர்சினி (புளியங்கூடல் வடக்கு , ஊர்காவற்றுறை), த. டயானி(நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை), க.தயானி(நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை)

*கனிஸ்ட பிரிவு:* ச.ரமா(புனித மரியாள் றோ.த.ம.வி.), க.சுவேதா(புனித மரியாள் றோ.க.ம.வி.), க.மாக்ஸ்சன் (புனித அந்தோனியார் கல்லூரி)

*சிரேஷ்ட பிரிவு:* செ.யோசுவா (புனித அந்தோனியார் கல்லூரி), அ.றொ. அனோஷன் (புனித அந்தோனியார் கல்லூரி), யே.பிருந்தா (புனித அந்தோனியார் கல்லூரி)

*திறந்த பிரிவு:* அ.ஆனந்த லட்சுமி (புனித அந்தோனியார் கல்லூரி), சீ. உருத்திரப் பிரியா(கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.), வ.கஜந்தினி (கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.)

பாடலாக்கம்

*திறந்த பிரிவு:* சீ.உருத்திரப்பிரியா (கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.), அ. ஆனந்த லட்சுமி (புனித அந்தோனியார் கல்லூரி), திருமதி.வ.கஜேந்தினி (கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.)

# கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்கள் நவீன தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்படும்

## கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கூறுகின்றார்



அச்சுவேலி, ஏப்.21

கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை நிலையங்களின் செயற்பாடுகள் நவீன உலகியல் மாற்றங்களுக்கு தேவைகளுக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட வேண்டும். பொருள்களைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்வதில் நவீன உத்திகளைக் கையாள்வதுடன் பொதுமக்களுக்கு நம்பிக்கைத் தன்மை உடைய முறையில் ஊழியர்கள் நடந்து கொள்ள வேண் டும்.

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆ. சுப்பிரமணிய சர்மா இவ்வாறு கூறுகின்றார்.

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கோப் சிற்றி திறப்பு விழா சங்கத்தின் தலைவர் க. பேரின்பநாயகம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ''கோப் சிற்றி''யைத் திறந்து வைத்த அபிவிருத்தி ஆணையாளர் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் உலகியல் மாற்றங்களுக்கு ஏற்ப நவீனமயப்படுத்தப்பட வேண்டும். விற்பனை நிலையங்களின் அமைப்பும் நடைமுறைகளும் பண்டசாலைகள் தொழிற்பட்ட காலப்பகுதியில் இருந்த கட்டமைப்புடனேயே இன்றும் காணப்படுகின்றன. இது உடனடியாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

பொருள்களைக் காட்சிப்படுத்தலிலும் கவர்ச்சிகரமான முறைகளைக் கையாள்வதுடன் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் விதத்தில் தமது நடவடிக்கைகளைக் கூட்டுறவு ஊழியர்கள் மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் உள்ள 305 கூட்டுறவு சங்கங்களுக்கு 'கோப் சிற்றி' விற்பனை நிலையங்களை ஆரம்பிக்க வேண்டும் என்ற நோக்குடன் உதவு தொகையாக ஒவ்வொரு பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தலா 10 லட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட சூழ்நிலையில் குறுகிய கால அவகாசத்தில் 'கோப் சிற்றி'யைத் திறப்பது கடினமான முயற்சியாக இருந்த போதிலும் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் யாழ். மாவட்டத்தில் முதல் நிலையில் நின்று 'கோப் சிற்றி' யைத் திறந்து வைத்துள்ளது. இது பாராட்டத்தக்க முயற்சி. இது போல ஏனைய சங்கங்களும் முன்னோடியாகச் செயற்படமுன் வர வேண்டும்.

ஒரு 'கோப் சிற்றி'யை மட்டும் திறந்து விட்டால் போதாது சங்கத்தின் அனைத்து விற்பனை நிலையங்களும் மாற்றியமைக்கப்பட்டு 'கோப் சிற்றி'யாக மறுசீரமைக்கப்பட வேண்டும். இதற்குக் குறுகிய கால அவகாசத்துடன் கூடிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

உலகமயமாக்கலுக்கு ஒப்ப கூட்டுறவுத்துறை தனது சகல செயற்பாடுகளையும் மறுசீரமைத்துக் கொள்வதோடு கணனிமயமாக்கப்பட வேண்டும். உறுப்பினர்களின் தேவைகளை இனங்கண்டு நிறைவு செய்ய வேண்டும்- என்றார்.

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் எஸ்.கனகசபாபதி ஆகியோரும் நிகழ்வில் உரையாற்றினர். (202-11)







அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 'கோப் சிற்றி' திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆ.சுப்பிரமணிய சர்மா மற்றும் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், கூட்டுறவுச் சபை தலைவர் எஸ்.கனகசபாபதி ஆகியோர் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் உரையாற்றுவதையும் முதலிரு படங்களிலும் காணலாம். கோப் சிற்றி கட்டடத்தின் தோற்றத்தை மூன்றாவது படத்தில் காணலாம்.

*(படங்கள் : அச்சுவேலிச் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று தனது 17 ஆவது
அகவையைப் பூர்த்தி செய்யும் எமது
அன்புச் செல்வன்



### நடராசா பிரணவன்

(யாழ் இந்துக் கல்லூரி மாணவன்)
20 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த)
பரீட்சையில் 10A சித்திபெற்றமையை
பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் அவர்
கல்வித்துறையில் ஒளிவீசிப் பிரகாசிக்க
ஸ்ரீ வீரகத்தி விநாயகரையும்
நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாளையும் வேண்டுகின்றோம்.

இவர் 10A சித்தி பெற அறிவூட்டிய அதிபர்கள், ஆசிரியர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
6 ஆம் வட்டாரம்
நயினாதீவு.
அப்பா, அம்மா, அண்ணாமார், அண்ணி, அக்காமார், அத்தான்மார், பெறாமகள், மருமக்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி
## தூண்டாமணி விளக்கே!

பிறப்பு 30 11 1989



இறப்பு 21 03 2008

### பூபாலேந்திரன் ரதீசன் (குமரன்)

ஆண்டு பல வாழ்வாய்! ஆனந்தம் சேர்த்திடுவாய்!
நீண்ட புகழ் பெறுவாய்! என்றே நினைத்திருப்பத்
தூண்டாமணி விளக்கே! விதியாய் காற்றாலே
ஈண்டு அணைந்தனையே எவ்வாறு தாங்கிடுவோம்.

தொட்டிலடி. (73342) உறவினர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### அல்போன்ஸ் எலிசபெத்



தாளையடியைப் பிறப்பிடமாகவும் இரணைப்பாலையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அல்போன்ஸ் எலிசபெத் 18.04.2008 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை-ஜேற்றூட் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - லூர்த்தம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், அல்போன்சின் அன்பு மனைவியும், இக்னேசியஸ் தயா (லண்டன்), நிமல்ராஜ் (லண்டன்), தனராஜ் (லண்டன்), இன்பராஜ் (அபிவிருத்தி உதவியாளர், பிரதேசசபை, பருத்தித்துறை), அக்னேஸ் வெனிசியா ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோ, கொறற்றி, எமல்டா, தவச்செல்வி, றெஜிஸ் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான வைற்றஸ், கென்றி, மரியபாலர், மேரி கொன்செப்ரா மற்றும் இருதயம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்கான இரங்கல் நாளை (22.04.2008) செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*"தவராசா"*
*கடற்கரை வீதி, பருத்தித்துறை.*
*தொ.பே.: 0776502688, 0779672871* (73356)

தகவல்:
இன்பராஜ் (மகன்).

### வேலாயுதம்பிள்ளை கிருஸ்ணகாந்தன்
### (கிட்டு)



(தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தித் திணைக்களம் R.D.D)

சீனியர் லேன், கலட்டியைப் பிறப்பிடமாகவும், தட்டாதெருவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம்பிள்ளை கிருஸ்ணகாந்தன் (கிட்டு) நேற்று (20.04.2008) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயு தம்பிள்ளை -ஜெயலக்சுமி தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் செல்வநாயகி ஆகியோரின் மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், கிரீசன், தனுஷன் (யா/இந்துக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வாலாம்பிகை, வசந்தி, சரஸ்வதி, பாலசுப்பிரமணியம், பவளமலர், காலஞ்சென்ற ஸ்ரீகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தேவராஜா, வரதராஜா காலஞ்சென்ற குமாரசாமி, இராஜரட்ணம், குணேஸ்வரன், மஞ்சுளா, தேவராணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.04.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல: 546, K.K.S றோட்,*
*யாழ்ப்பாணம்.* (73363)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## முதலுதவிப் பயிற்சி

கரவெட்டி, ஏப்.21

வல்வை சிவ குரு வித்தியாலய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் முதலுதவிப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர் எஸ்.செல்வராசா தலைமையில் வித்தியாலய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் செ ன். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பயிற்சியாளர் எஸ்.ஈழநேசனால் முதலுதவிப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கான ஒழுங்குகளை வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் ஏற்பாடு செய்தார்.

(202-70)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2007 ஆம் ஆண்டு க.பொ.த
சாதாரணதரப் பரீட்சையில்
அதிவிசேட சித்தி 10 A
பெற்ற வட்டு. மத்திய கல்லூரி
மாணவி
செல்வி

### மைதிலி
### மோகனராசன்

பல்துறை சிறந்த மாணவியை
பாராட்டி வாழ்த்துவதோடு,
மேலும் பல சிறந்த
பேறுபேற்றைபெற
வாழ்த்துகின்றோம்.

★ செல்வி சோபிகா
செல்வச்சந்திரன் 8A 2B
★ செல்வன் கனகசுந்தரம்
கௌதமன் 7A B 2C
ஆகியோரையும்
பாராட்டுகின்றோம்.

பாடசாலை சமூகம். (73339)



## விற்பனைக்கு

தனியார் கல்வி நிறுவனத்துக்குரிய தளபாடங்கள்
மலிவாக விற்பனைக்குண்டு. T.P:0775922225
இ. சயேந்திரன்
*பொன்னையா லேன், ஆனைக்கோட்டை.*

## Spoken English & Grammar

வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
அச்சடித்த பாடங்கள், பயிற்சிகள்
School Leavers , வெளிநாடு செல்லவுள்ளோர்
காலம்:- 1 மாதம் - தினசரி வகுப்புகள்
By: Mr.B.Ruban (A/L English Teacher & BBA)
தொடர்பு:- Jaffna Technical Institute, 0779785749

## துயர் பகிர்கின்றோம்


எமது ஆருயிர் நண்பன் கிரிசன்
அவர்களின் பாசமிகு தந்தையார்

### வேலாயுதம்பிள்ளை
### கிருஸ்ணகாந்தன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மசாந்திக்காக
ஸ்ரீராகவேந்திரரைப் பிரார்த்திக்கின்றோம்.
மணிக்கல்வி நிறுவன 2004 ஆம்
ஆண்டு O/L மாணவ,
மாணவிகள். (73364)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில்
கடமையாற்றும்
ஆய்வுகூட உதவியாளர்
திரு. N. பத்மதேவா
அவர்களின் அன்பு
மனைவி



### பத்மதேவா கல்யாணி

அவர்கள் 18.04.2008 அன்று காலமானதை
யிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின்
இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
கல்விசாரா ஊழியர்கள்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. (73361)

## கண்ணீர் அஞ்சலி

எமதுகல்லூரியில்
கடமையாற்றும்
ஆய்வுகூட
உதவியாளர்
N. பத்மதேவா
அவர்களின் அன்பு
மனைவி



### பத்மதேவா கல்யாணி

அவர்கள் 18.04.2008 அன்று காலமானதை
யிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின்
இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனு
தாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யாழ்ப்பாணம் மத்திய
கல்லூரி.




Tally®
Scholarship For Tally Training
Certified Computer Accountant
கணக்கியல் மென்பொருள் கற்கைநெறி
AIT
ACCOUNTANCY INTELLIGENCE TEST
APRIL 27th வரை மட்டும்...
A/L மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், HNDA,
AAT மாணவர்கள் மற்றும் கணக்கியல் துறையில்
ஆர்வமுடைய அனைவரும் இத்தேர்வில்
பங்குபற்றி 60% வரையிலான கட்டணக்கழிவைப்
பெற முடியும்.
விரையுங்கள் வெற்றிபெறுங்கள்
CSC
COMPUTER SOFTWARE COLLEGE
மேலதிக விபரங்களுக்கு
CSC Computer Education, T.P:222 8196
101,2nd Floor(மக்கள் வங்கிக்கு மேலாக,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



எமது இரசாயனவியற்றுறையின் சிரேஷ்ட
விரிவுரையாளர் கலாநிதி
J.P.ஜெயதேவன்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி இரத்தினதேவி
### ஜெயரத்தினம்

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடை வதற்கு ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துறைத்தலைவர், விரிவுரையாளர்கள், ஊழியர்கள்,
இரசாயனவியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம். (73357)

## கண்ணீர் அஞ்சலி



எமது உற்ற நண்பரும், சக
விரிவுரையாளருமான கலாநிதி பிறின்ஸ்
ஜெயதேவன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி இரத்தினதேவி
### ஜெயரத்தினம்

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் எமது உற்ற நண்பனுக்கும், அவரது தந்தை செ.ஜெயரத்தினம் அவர்களுக்கும் மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*நண்பர்கள் (விரிவுரையாளர்கள்),*
*விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்.*
(73358)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 22.03.2008 அன்று
இறைபதமடைந்த எங்கள்
அன்புத் தெய்வம்
அமரர்

### இராமலிங்கம் சின்னத்தம்பி

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள்
இன்று (21.04.2008) திங்கட்கிழமை
முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின்
இல்லத்தில் நடைபெற உள்ளன.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (73352)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான பெண்களுக்கான கபடிப்போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இறுதிப் போட்டியில் உடுவில் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொள்வதை முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

இரண்டு அணிகளின் வீரர்களையும் மூன்றாவது படத்தில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

### சுன்னாகம் றோட்டறக்ட் ஆதரவில் நடத்தப்பட்ட

# றொகான் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது பல்கலை உடற்கல்வி அணி



வலி.வடக்கு,ஏப்.21

சுன்னாகம் றோட்டரக் கழகம் நடத்திய முன்னாள் யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலர் அமரர் றொகான் இராஜசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி அணி வெற்றி பெற்று றொகான் இராஜசிங்கம் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக்கழகமும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உடற்கல்வி அணியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடின. ஆனாலும் போட்டியின் முதல் பாதி ஆட்டம் முடிவடைய சில நிமிடங்கள் இருக்கும் நிலையில் உடற்கல்வி அணியின் வீரன் குகன் தனக்குக் கிடைத்த பந்தை மிகவும் லாவகமாக முன்நகர்த்திச் சென்று அடித்து ஒரு கோலைப் பெற்றுக் கொண்டார்.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் கிறாஸ் கொப்போஸ் விளையாட்டுக் கழக வீரர்கள் எதிரணியினரின் கோல்கம்பப் பகுதியில் தொடர்ச்சியாகப் பந்தை நகர்த்திச் சென்று நெருக்கடியை ஏற்படுத்திய போதிலும் கோல்களைப் பெறமுடியவில்லை.

இந்நிலையில் உடற்கல்வியின் பின்னணி வீரர் ஒருவர் முன்னணியில் நின்ற வீரர் நிசாந்தனுக்கு ஒரு பந்தை அடித்துக் கொடுத்தார். இதனை மறித்து முன்நகர்த்திய நிஷாந்தன் வேகமாக அடித்து உடற்கல்வி அணிக்கு 2ஆவது கோலையும் பெற்றுக் கொடுத்தார்.

இரு அணிகளும் தொடர்ந்து கோல்கள் பெறப் போராடிய போதிலும் கோல்கள் எதனையும் பெற முடியவில்லை.

ஆட்ட நேர முடிவில் பல்கலைக்கழக உடற்கல்வி அணியினர் 2 :0 என்ற கோல் கணக்கில் கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

3ஆம் இடத்திற்கான போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியும் வட்டுக்கோட்டை ஒல்ட்கோல்ட் அணியும் மோதிக் கொண்டன. முதல்பாதி ஆட்டத்தில் ஒல்ட்கோல்ட் அணி ஒரு கோலைப் பெற்று முன்னணியில் நின்ற போதிலும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் பல்கலைக்கழக அணி தொடர்ந்து 2 கோல்களைப் பெற்று முன்னணியில் காணப்பட்டது. போட்டி முடிவடைய ஒரு சில நிமிடங்கள் இருக்கும் நிலையில் ஒல்ட்கோல்ட் அணி மேலும் ஒரு கோலைப் பெற்றுக் கொண்டதைத் தொடர்ந்து ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக மேலும் 5 நிமிடங்கள் இரு அணிகளுக்கும் வழங்கப்பட்ட போதிலும் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறவில்லை. தொடர்ந்து சமநிலை தவிர்ப்பு உதைகள் தலா 5 வழங்கப்பட்டதில் பல்கலைக்கழக அணியினர் 3 கோல்களையும் ஒல்ட் கோல்ட் அணியினர் 2 கோல்களையும் பெற்றுக் கொண்டதைத் தொடர்ந்து பல்கலைக்கழக அணி 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.(1-86)

### குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# நல்லூர் பிரதேச வலைப்பந்தாட்டம் கொக்குவில் வி. கழகம் சம்பியன்

வலி.வடக்கு, ஏப்.21

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வலைப்பந்தாட்ட அணி வெற்றி பெற்று நல்லூர் பிரதேச செயலக சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய வலைப்பந்தாட்ட மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் விறுவிறுப்பாக விளையாடிய போதிலும் இரண்டாம் பாதி ஆட்டம் சற்று வேகம் குறைந்த ஆட்டமாகவே காணப்பட்டது.

போட்டி முடிவில் கொக்குவில மத்திய சனசமூக நிலைய விளையாட்டு அணி 24:17 புள்ளிகள் என்ற அடிப்படையில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு தெரிவு செய்யப்பட்டது. (1-86)

### கே.ஸி.ஸி.ஸி. கிண்ண கிரிகெட்

# யூனியன்ஸை வென்றது ஜொனியன்ஸ்

வலி.வடக்கு, ஏப்.21

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்திற்கான 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய 'லீக்' முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இப்போட்டியில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 29.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து 195 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது. பிரியதர்சன் 67, கிரிசாந் 29, கிருபவன் 27 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்கள்.

சுஜந்தன் 06 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், கிருபா 06 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன் பிரசாந்தன், இராகுலன் முறையே 34, 42 ஓட்டங்களைக் கொடுத்துத் தலா 02 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் விளையாடடுக் கழகம் 29.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 158 ஓட்டங்களைமட்டும் பெற்றுக் கொண்டது.

கவி 24, றொசாந், கிருபா தலா 17 ஓட்டங்களை பெற்றார்கள்.

ரதீஸ் 5.3 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டையும், நவநீதன் 03 ஓவர்கள் பந்து வீசி 07 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டையும் வதனன் 06 ஓவர்கள் பந்து வீசி 19 ஓடட்ங்களுக்கு 02 விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

# 21ஓட்டங்களால் சென்றல் வெற்றி

யாழ்ப்பாணம், ஏப்.21

கே.ஸி.ஸி.ஸி.கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மற்றோர் ஆட்டத்தில் சென்றல் விளையாட்டுக் கழகம் சிறி காமாட்சி வி.காவை 21 ஓட்டங்களால் வென்றது.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் விளையாட்டு கழகத்தினர் 24.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றனர். எஸ்.சுரேஸ்ராஜா 10, ரி.யோன்சன் 13, எஸ்.விமலகாந்15, சா.ரஜீத் 18, கலிஸ்ரன் 11 ஓட்டங்களைப் பெற்றனர்.

தீபன் 26 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் அஜித் 19 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்கையும் சியாம்சன் 12 ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

118 ஓட்டங்களுக்கு பதிலளிக்கு முகமாக துடுப்பெடுத்தாடிய சிறி காமாட்சி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினர் 22 பந்துப் பரிமாற்றங்களில் 97 ஓட்டங்களையும் பெற்று சகல விக்கெட்டகளையும் இழந்தனர். ப.வசீகரன் 17, அஜித் 25 ஓட்டங்களைப் பெற்றனர். எஸ்.ஜசிந்தன் 15 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் சுவாதீஸ் 6 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இந்த வெற்றியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 8 புள்ளிகளைப் பெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது (1)

# வடமராட்சி கழகங்களுக்கு இடையே 20/இருபது மென்பந்துச் சுற்றுப் போட்டி

மந்திகை, ஏப்.21

வடமராட்சியில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் 20/20 மென்பந்தாட்டம் இடம்பெறவுள்ளது.

புத்தாண்டை ஒட்டி இலங்கை வங்கியின் பருத்தித்துறை கிளை, பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து இந்தச் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.

திக்கமுனை மைதானத்தில் இந்தப் போட்டியை நடத்த ஏற்பாடாகியுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் பருத்தித்துறை இலங்கைவங்கி விளையாட்டுக்கழகச் செயலாளருடன் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிளை முகாமையாளர் க.ப.ஆனந்த நடேசன் கேட்டுள்ளார். (1-218)

# மெய்வன்மையாளர்களுக்கு கொழும்பு அதிகாரிகள் பயிற்சி



வலிவடக்கு, ஏப்.18

இலங்கை மெய்வன்மை சங்கத்தினால் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தயார்படுத்தும் வகுப்புகள் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடத்தப்பட்டன.

கொழும்பில் இருந்து வருகைதந்த இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் தலைவர் [illegible] வகுப்புகளை நடத்தினார்.

உதவி விரிவுரையாளர்களான இலங்கை மெய்வன்மைச் சங்கத்தைச் சேர்ந்த எஸ். தெய்வேந்திரம், திருமதி வைத்தியதிலக, யாழ்.மெய்வன்மைச் சங்க தலைவரும் வடக்கு, கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சின் முன்னாள் பணிப்பாளருமான தாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விரிவுரை இடம்பெறுவதையும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதி [illegible] படங்களில் காணலாம். (1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை

# ஆச்சார்ய அபிசேக விஞ்ஞாபனம்



சுவஸ்தி ஸ்ரீ,

நிகழும் மங்களகரமான சர்வதாரி வருஷம் சித்திரைத் திங்கள் 9ஆம் நாள் இன்று (21.04.2008) திங்கட்கிழமையும் பிரதமை திதியும் சுவாதி நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய முற்பகல் 11 மணி முதல் 12.30 மணிவரையுள்ள கடகலக்ன சுப வேளையில்

யாழ். வண்ணை கடைத்தெரு வேம்படி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான முன்னாள் பிரதம குரு நா. முத்துசாமிக் குருக்களின் பௌத்திரனும் அராலி தெற்கு சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் வெ.குகசாமிக் குருக்களின் தௌகித்திரனும் (இணுவில் காயத்திரி பீடம்) மகாதேவக் குருக்கள் (இந்தியா பிள்ளையார்பட்டி) டாக்டர் கே.பிச்சைக் குருக்கள் அவர்களின் சிஷ்யனும் எமது ஏக புத்திரனுமான

**சிரஞ்சீவி பிரதீப சர்மாவுக்கு** (குருப்பட்டம் வழங்கல்)

யாழ்.கடைத்தெரு வேம்படி ஸ்ரீ சித்தி விநாயகர்அருளும் வண்ணை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் அனுக்கிரகமும் பெரியார்களின் ஆசீர்வாதமும் கொண்டு விஷேச தீட்சா, நிர்வாண தீட்சா, சிவாச்சார்ய அபிசேக வைபவம் கொழும்பு, கொட்டாஞ்சேனை, ஜங்கரன் மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தீட்சாகுரு கிரியாகான கலாமணி (மட்டுவில்) சிவஸ்ரீ கி.சோமசுந்தரக்குருக்கள் (ஜே.பி.)

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்:

சிவஸ்ரீ மு. விஜயகாந்தக் குருக்கள் கிரிஜாம்பாள் தம்பதியினர்,
233, செட்டியார் தெரு முத்து விநாயகர் தேவஸ்தானம், கொழும்பு - 11.
தொலைபேசி: 011 5684579, 077 4544920

## தவறிவிட்டது

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகத்தைச் சேர்ந்த சண்முகரத்தினம் சதீஸ்வரன் என்பவருடைய (890392571 V) தேசிய அ.அட்டை தவறிவிட்டது: கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம். T.P: 077 9103468

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

977 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கடகம் 03 16 34 40

18-04-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 5642323 - 5650624

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 172,049 | 10/- | 1,720,490/- |
| 2 இலக்கங்கள் | 15,873 | 20/- | 317,460/- |
| 1 இல. + லக்கினம் | 15,692 | 30/- | 470,760/- |
| 2 இல. + லக்கினம் | 1,429 | 100/- | 142,900/- |
| 3 இலக்கங்கள் | 432 | 500/- | 216,000/- |
| 3 இல. + லக்கினம் | 44 | 5,000/- | 220,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 3,287,610/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 205,526 | | 4,311,110/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,384,450/-

தொடர் இலக்கம் 4752975 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 ஏப்ரல் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேன் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| களுத்துறை | 5645936-7-95 |
| காலி | 5648169-6-74 |
| பதுளை | 5645142-8-80 |
| திருகோணமலை | 5647907-8-88 |
| மாத்தறை | 5644661-2-68 |

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**சிதம்பரப்பிள்ளை கிருஷ்ணசாமி**

வாழ்விற்கு ஒளியானீர் வையத்தில் எமைக் காத்தீர்
வளமோடு நாம் வாழ பலமான உரமானீர்
எமைவிட்டு நீர்சென்று ஈராண்டு ஆனாலும்
இறைபாதம் தினம்நாடி உமக்காகத் தொழுகின்றோம்

மண்மகிழ 20.02.1952 கண்நெகிழ 13.05.2006

நீங்கா நினைவோடு:
மனைவி, மக்கள், மருமக்கள்.
காடிவளை,இளவாலை.

அலங்காரத் திருவிழாவும் நாடகவிழாவும்

பருத்தித்துறை புலோலி மத்தி தொப்பிளாவத்தை நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா பூர்த்தியும் நாடகவிழாவும்இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளன.

இரவு 8 மணிக்கு நடைபெறும் நாடக விழாவில் பருத்தித்துறை நவதுர்க்கா நாடக மன்றத்தின் அண்ணாவியார் ஜெயவசீகரனின் நெறியாள்கையில் 'மாலைக்கு வாதாடிய மாரி மைந்தன்' நாடகம் இடம்பெறும்.

(202-236)

# கண்ணீர் அஞ்சலி

## துரைசாமி துரைநாயகம்

(துரை அண்ணை)



துரைச்சாமி துரைநாயகம் (துரை அண்ணா) அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த துயரடைவதுடன் இவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி!

ஓம் சாந்தி!!


ஓம் சாந்தி!!!

மாருதி வெளிநாட்டு நாணய மாற்றுநர் (வெள்ளவத்தை, கொழும்பு)

உஷா ஏஜென்சி(யாழ்ப்பாணம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.
தேரை நோக்கி அம்மன் எழுந்தருளுவதை முதலாவது படத்திலும் அம்மன் தேரேறி வீதிவலம் வந்து அடியவர்களுக்கு அருள் பாலிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். பிள்ளையார், வைரவர் அம்மன் ஆகிய மூர்த்திகள் மூன்று தேர்களில் ஒன்றன்பின் ஒன்றாக வலம் வருவதை மூன்றாவது படத்தில் காணலாம் (படங்கள்:சுந்தர்)

# படுக்கை விரிப்பை துவைப்பதற்கு தண்ணீர் இல்லாததால் வெறும் தரையில் படுக்கிறோம்

## பாங்கோக் சிறையில் நான்கு பிள்ளைகளுடன் 10 மாதங்கள் தங்கியுள்ள திருமதி ஜெயபாலன்

''படுக்கை விரிப்பை துவைப்பதற்கு தண்ணீர் இல்லாமையால் இப்போது வெறும் நிலத்தில்தான் படுக்கிறோம்''

இப்படி தாய்லாந்துச் சிறையில தானும் தனது மூன்றுபிள்ளைகளும்படும்அவலத்தை விவரித்தார் திருமதி ஜெயபாலன்.

இலங்கையில் இருந்து வெளிநாடு செல்வதற்காக தாய்லாந்துக்குச் சென்று அங்கு பாங்கொங்கில் கடந்த 10 மாதங்களாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள திருமதி ஜெயபாலன் ஆஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கிய பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:

இங்கு சாப்பாடு பிரச்சினை. நோய்களுக்கு மருந்தில்லை. இங்கு வேற்று நாட்டுக்காரர்கள் வந்து போவார்கள். இங்கு வந்து போகின்றவர்களால் பிரச்சினை. அவர்களால் தொற்று நோய்கள் ஏற்படுகின்றன. வயிற்றோட்டம், காய்ச்சல், சொறி போன்ற நோய்கள் வருகின்றன. இன்றும் தண்ணீர் இல்லை. இப்படித்தான் இடைக்கிடை தண்ணீரை நிறுத்துவார்கள்.

படுக்க முடியாமல் இருக்கும்போது சில வேளை அழுது கொண்டுதான் இருப்பேன். ஒரு சின்ன இடத்தில் 4 பிள்ளைகளையும் படுக்க விட்டிட்டு நான் இருப்பேன். சில நேரம் அந்த இடமும் கிடைக்காது. என்ன செய்வது. சரியா நெருங்கி நெருங்கி தான் படுக்கிறோம். எனது பிள்ளைகள் மிகவும் துன்பப்பட்டு கொண்டுதான் இருக்கின்றனர்.

### நாங்கள் கதைத்தால் அவர்கள் அடிக்கிறார்கள்

எனது 2ஆவது மகளுக்கு கன்னம், கன்னமாக அடித்தும் போட்டார்கள். அவர்களுடன் ஒன்றும் கதைக்க முடியாது. எமக்கு தமிழ்மொழிதான் தெரியும். வேறுமொழி தெரியாது. வேறு நாட்டுக்காரரை கொஞ்சம் தள்ளியிரு என்று சொன்னதிற்கு எனது பிள்ளைக்கு அடித்தார்கள். நாங்கள் கதைக்க முடியாது. நாங்கள் கதைத்தாலும் அவர்களுக்கு ஒன்றும் விளங்காது.

இன்று எனது மகனுக்கு வயிற்றோட்டம். ஒன்றுமே செய்ய முடியாமல் இருக்கிறது. வருத்தம் என்றால் பிள்ளைகளை பரீட்சிப்பதில்லை. எம்மை வைத்து பூட்டியிருக்கும் வெளியில் ஓர் ஓட்டை இருக்கிறது. அந்த ஓட்டைக்குள்ளால் என்ன வருத்தம். காய்ச்சலா, சத்தியா, வயிற்றோட்டமா, எத்தனை நாள் என்று அவ்வளவு தான் கேட்பார்கள்.

### காலையில் வருத்தம் என்று சொன்னால் மாலையில் மருந்து தருவார்கள்

அடுத்தது என்ன வருத்தம் என்று காலையில் வந்து கேட்டுவிட்டு போனார்கள் என்றால் மாலையில்தான் மருந்து கொண்டுவந்து தருவார்கள். அதுவும் எங்களிடம் தருவதில்லை. சிறைச்சாலை அதிகாரியிடம்தான் கொண்டு வந்து கொடுத்து விட்டு போவார்கள். அவர்கள் மருந்தை கொண்டு வந்து இலக்கத்தினை எழுதி ஓட்டைக்குள் தள்ளிப் போட்டு போவார்கள்.

சிலவேளை எப்படி மருந்தினை கொடுப்பது என்று கூட தெரியாமல் இருக்கும். எப்படிபோடுவதுஎதற்குஎன்றுஒன்றும்தெரியாது. காய்ச்சல், வாந்தி, வயிற்றோட்டம் என்றால் மூன்றுக்கும் ஒரேயடியாக எழுதி போட்டு விட்டு போனால் எந்த வருத்தத் திற்கு என்ன மருந்து என்று ஒன்றும் தெரியாது. அனைத்தையும் ஒன்றாகவே தரு வார்கள்.

கேள்வி:இந்த 10 மாதங்களில் எப்போதாவது உங்களை இந்த அறையை விட்டு வெளியில் விட்டிருக்கின்றனரா?

பதில்: சிலவேளையில் கீழே இறக்கி கொண்டு போவார்கள். இப்போது அதுவும் இல்லை. முன்னர் மாதத்திற்கொரு தடவை இறக்கி விடுவார்கள். அந்த இடமும் அறை மாதிரிதான். பிள்ளைகளுடன்வேற்றுநாட்டுக்காரர்கள் எல்லோரையும் இறக்கி விடுவார்கள். தற்போது அதுவும் இல்லை.

முன்னர் படுக்கை விரிப்பை விரித்துப் படுத்தோம். இப்போது தண்ணீர் இல்லாத படியால் தோய்க்க முடியாது. வெறும் நிலத்தில் தான் படுக்கின்றோம். எல்லோரும் அப்படித்தான் நிலத்தில் தான் படுப்பார்கள்- என்றார். (அ-2)

*(திருமதி ஜெயபாலனின் 10 வயது மகள் தாரகா அளித்த பேட்டி நேற்றைய உதயனில் பிரசுரமாகி இருந்தது)*

# ஈரான் ஜனாதிபதி 28ஆம் திகதி இலங்கைக்கு விஜயம்

கொழும்பு,ஏப்.21

ஈரான் ஜனாதிபதி மஹ்மூத் அஹமத் நஜாதி உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 28ஆம் திகதி இலங்கை வருகிறார். இவர் பதவியேற்ற பின்னர் ஆசிய நாடொன்றுக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட அழைப்பின் பேரில் ஈரான் ஜனாதிபதி இங்கு வரவுள்ளார். ஈரான் ஜனாதிபதியின் முதலாவது ஆசிய விஜயத்துக்கான நாடாக இலங்கையைத் தேர்தெடுத்தமையும் இலங்கைக்கு அதிகளவிலான நிதி உதவிகளை ஈரான் வழங்க முன்வந்துள்ளமையும் இலங்கை ஜனாதிபதிக்குக் கிடைத்த ஒரு பெரும் வெற்றியாகும் என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர் என அரச இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட் டுள்ளது.

நாட்டில் ஆரம்பிக்கப்படவுள்ள இறுதியானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான உமா ஓயா நீர் மின் உற்பத்தித் திட்டத்தின் நிர்மாணப் பணிகளுக்கான அடிக்கல் நடும் வைபவம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஈரான் ஜனாதிபதி நஜாதி ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த வைபவம் எதிர்வரும் 29ஆம் திகதி வெல்லவாய பிரதேசத்தில் இடம் பெறவுள்ளது. இந்த அபிவிருத்தித் திட்டத்திற்கென 450 மில்லியன் டொலர் ஈரான் அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ளதாவும் அந்த இணையத்தளத்தின் செய் திகள் தெரிவிக்கின்றன.

(202)

# இலங்கை இனப்பிரச்சினையில் சமரசத்தீர்வுகாண இந்தியா உடனடியாகத் தலையிட வேண்டும்

## பிரதமர் மன்மோகன்சிங்கிடம் இராமதாஸ் கோரிக்கை

சென்னை,ஏப்.21

இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய அரசு தலையிட்டு சமரசத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் கோரியுள்ளார். புதுடில்லியில் கடந்த வெள்ளிக்கிழமை பிரதமரை நேரில சந்தித்து அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கையில் அரச படையினர் மிகக் கடுமையான முறையில் தாக்குதல் தொடுத்துள்ளனர். இதனால் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர் - அவர்களின் மனித உரிமைகளும் மீறப்படுகின்றன. எனவே இந்திய அரசு உடனடியாகத் தலையிட்டு அரசியல் தீர்வு காண உதவ வேண்டும் எனப் பிரதமரிடம் ராமதாஸ் சந்திப்பின்போது வலியுறுத்தியுள்ளார்.

பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த ராமதாஸ் இலங்கைச் சிக்கல் குறித்து தனது ஆழ்ந்த கவலையைப் பிரதமர் தெரிவித்ததாகக் கூறியுள்ளார்.

(202)

# வெள்ளைவான் கடத்தலுக்கும் படையினருக்கும் தொடர்பு உள்ளது என்கிறார் மனோகணேசன்

கொழும்பு,ஏப்.21

கொழும்பில் வெள்ளை வானில் தமிழர்கள் கடத்தப்படும் சம்பவங்களுக்கும் படையினருக்கும் தொடர்பு உள்ளது என மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையிலுள்ள ஆஸ்திரேலிய தூதரகத்தில் உயர்ஸ்தானிகர் கத்தே கிளக்மனை சந்தித்துக் கலந்துரையாடிய போதே மனோகணேசன் இதனைத் தெரிவித்துள்ளார்.

மனோகணேசன் மேற்படி சந்திப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:

இருக்கின்ற சட்டதிட்டங்களுக்கு அமைவாக நாட்டில் வாழ்கின்ற எந்தவொரு பிரஜையையும் விசாரணை செய்வதற்கு படையினருக்கு பூரண உரிமை இருக்கின்றது. எனினும் அந்த உரிமையை மீறுகின்ற வகையில் படையினர் செயற்படுகின்றனர். வெள்ளை வானில் தமிழர்கள் கடத்தப்படுகின்றமைக்கு படையினருடன் தொடர்பு இருக்கின்றமை நிரூபணமாகியுள்ளது.

கொழும்பிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் இடம்பெறுகின்ற வெள்ளை வான் கடத்தலுடன் படையினருக்கு தொடர்பு இருக்கின்றது. அண்மைய காலங்களில் வெள்ளை வானில் கடத்தப்பட்ட தமிழர்கள் குற்றத்தடுப்பு பிரிவில் நான்காம் மாடியில் அல்லது பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளை வானில் ஆயுதங்களுடன் சிவில் உடைகளில் வருகின்ற இனந்தெரியாதவர்களே இவ்வாறான கடத்தல் சம்பவங்களுடன் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும் கடத்தப்படுப வர்கள் பொலிஸ் நிலையங்களில் நான்காம் மாடியில் அல்லது குற்றத்தடுப்பு பிரிவில் தடுத்து வைக்கப்படுவது ஏன்? அவ்வாறு கடத்திச் சென்று தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு பாதுகாப்பு தரப்பினருக்கு எவ்விதமான அதிகார மும் வழங்கப் படவில்லை.

சிவில் உடையில் படையினரால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான செயற்பாடுகள் மனித உரிமைகளை அப்பட்டமாக மீறுகின்ற செயற்பாடு மட்டுமல்லாது. படையினருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் நட வடிக்கையாகும். அதற்கு சர்வதேச சமூ கமும் சிவில் சமூகமும் இடமளிக்கக்கூடாது என்றும் எடுத்துரைத்துள்ளேன் - என்றார். (202)

# அல்லைப்பிட்டியில் மேலும் 65 குடும்பங்கள் மீள் குடியமர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.21

அல்லைப்பிட்டியில் மேலும் 65 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்படவுள்ளன.

யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷ் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

இரண்டாம் கட்டமாக குடியமர்த்தப்படவுள்ள குடும்பங்களுக்கு உதவுவதற்கு பல சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் முன் வந்துள்ளன.

இரண்டாம் கட்டமாக மீளக் குடியமர்த்தும் நடவடிக்கை இன்று இடம்பெறவுள்ளது.

மீளக் குடியமர்த்தும் வேர்ல்ட் விசன், சோ - ஆ, கிறுடெக் - கரித்தாஸ், பிரதேச சபை, பிரதேச செயலகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் சமுகமளிப்பர்.

(202-95)

# விடுதலைப் புலிகள் யார் என்பதை எமது பதிலடியே உலகுக்கும் சிங்கள தேசத்திற்கும் உணர்த்தும்

## *தளபதி கேணல் ஆதவன் கூறுகின்றார்*

கிளிநொச்சி,ஏப்.21

எதிரிக்குக் கொடுக்கப் போகும் பதிலடி மூலமே நாம் - விடுதலைப்புலிகள் - யார் என்பதை உலகமும் சிங்கள தேசமும் விரைவில் உணரும். அதுவும் விரைவில் நடந்தே தீரும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி கேணல் ஆதவன் தெரிவித் துள்ளார்.

லெப்.கேணல் ஜெயராட்டின் வீர வணக்க நிகழ்வு மந்துவில் வட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வீரவணக்க உரைநிகழ்த்திய கேணல் ஆதவன் மேலும் தெரிவித்த தாவது:

20 ஆண்டுகளாக விடுதலைப் போராட்ட வரலாற்றில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி தலைமைக்கு மிகவும் உறுதியான எழில் மிக்க தளபதியாக விளங்கியவர் லெப்.கேணல் ஜெராட். நெருக்கடியான காலத்தில் எண்ணற்ற செயல்களை செய்த தளபதி பல வடிவங்களில் மக்களுக்காக உழைத்துள்ளார்

அவர் தனது போராட்ட வாழ்க்கையில் மிகவும் விருப்போடு செயற்பட்ட ஓர் அற்புதமான தளபதி. அத்தகையோரின் வரலாற்றை சுமந்து தான் எமது மண்ணும் மக்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றனர்.

மிகவும் நெருக்கடியான காலங்களில் எல்லாம் தலைமையுடன் பக்க பலமாக நின்று எந்நேரமும் மக்களுக்காகவே வாழ்வதையே ஜெராட் பெருமையாக கொள்வார்.

அவரது களமுனை வரலாறு தனித்துவமானது. கனரக போர்க்கலங்களைக் கையாள் வதில் பெரும் தந்திரமான தளபதி. இப்போது நாம் எழுச்சிமிக்க காலத்தில் நகர்ந்து கொண்டிருக்கின்றோம் - என்றார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈராண்டின் ஈரமான நினைவலைகள்



மலர்வு
07
.
04
.
1944

உதிர்வு
14
.
04
.
2006

## அமரர் சிவக்கொழுந்து இராஜதுரை

திதி: 21.04.2008

என் உயிரில் கலந்த உறவே
என்னுயிர் தங்கள் உயிருடன்
சங்கமிக்கும் நன்னாள்வரை
உந்தன் நிஜமான நினைவுகள்
வாழும்! வளரும்!!

"எப்போதும் இனியானை என் மனத்தே வைத்தேனே"

என்றும் தங்கள் ஆருயிர் மனைவி:
ஸ்ரீமதி தவேஸ்வரி இராஜதுரை M.A, M.phil
(ஆசிரிய ஆலோசகர்).

குப்பிளான்,
ஏழாலை.

(73290)

## 'பக்ஸ்' வசதி

சங்கானை,ஏப்.21

வட்டுக்கோட்டை தபாற் கந்தோருக்கு கடந்த முதலாம் திகதி தொடக்கம் 'பக்ஸ்' வசதி செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் தபாற்கந்தோருக்கு வரும் பொதுமக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின் றது. (202-29)

## புராண படன நூல்கள் விநியோகம்

சுழிபுரம்,ஏப்.21

புராண படன நூல்களை ஆலய பாவனைக்கு பெற்றுக் கொடுப்பதில் பஜனைச் சபையார் ஒரு தொண்டாக செய்து வருகின்றனர்.

கந்தபுராண படன செய்யுள் கருத்துரை நூல்கள், காசி காண்ட வசனநடை, திருவாசகம், திருக்கோவையார் செய்யுள் நூல், திருமுறை தொகுப்பு போன்ற நூல்களை பஜனைச் சபையார் தமது நூலகத்தில் வைத்து விநியோகித்து வரு கின்றனர்.

நூல் தேவைப்படுவோர் தபால் மூலமாக 'செயலாளர், பஜனைச் சபை, சுழிபுரம்' என்ற முகவரிக்கு கடிதம் எழுதி தபால் மூலமாக நூல்களை பெற்றுக் கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (202-28)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**இரத்தினம் செந்தூரன்**
(உரிமையாளர், ஆஞ்சநேயர் ரேடர்ஸ்,
வங்களாவடி, வேலணை)

உதிப்பு: 26.01.1981 உதிர்வு: 13.05.2006



பெற்றோருக்கும் சகோதரர்க்கும்
நிலவாக வந்த செந்தூரனே
வீட்டில் கடைக்குட்டிச் செல்லமே - நீ
எம்மை விட்டு எங்கு சென்றாய் -
செந்தூரனே
ஊருக்கும் உலகுக்கும் கை
கொடுக்கும் உத்தம செல்வமே
உம்மை எங்கு இனிக் காண்போம்
செந்தூராவே.

(73310)

தகவல்:
**இரத்தினம் குடும்பத்தினர்.**
வேலணை வடக்கு,
வேலணை.

## 31ஆம் நாள் நினைவு கூரல்

அன்னை மடியில்
17
*
09
*
1946



இறைவனின் இல்லத்தில்
23
*
03
*
2008

### திருமதி தாசைப்பிள்ளை ஞானமலர்

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

அம்மா என்று அழைக்க நீங்கள் இல்லை
ஆறுதல் தர யாரும் இல்லையே!
அன்போடு அரவணைத்த நீங்கள் இல்லை
எங்களை அல்லலுறச் செய்து
விண்ணுலகம் சென்றீர்களோ?

பாசப் பறவைகளாய் வாழ்ந்தோம்
தாய்ப்பறவை நீங்கள் மட்டும் பறந்தது ஏன்?
பாசக் குலக்கொடிகள் நாம் தவிக்கின்றோம்
பரமனிடம் எங்களுக்கும் இடம் கேட்கச் சென்றீர்களோ?

இவரின் ஆத்மசாந்திக்காக நாளை (22.04.2008) செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு பொலிகண்டி குழந்தைஇயேசு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்தில் உற்றார், உறவினர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
சூ.அன்ரன் மரியநாயகம், சகோதரர், பிள்ளைகள், மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.
திக்கம். (73112)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்
அன்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்
வளர்ச்சிக்கும் முயற்சிக்கும் வழிகாட்டியாய் வாழ்ந்து
ஒளிச் சுடராய் திகழ்ந்த எங்கள் குலவிளக்கின்

உயிர் பிரிந்த செய்திகேட்டு ஓடோடி வந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும் அன்னாரின் இறுதிச்சடங்கில் வந்து பங்கு கொண்டவர்களுக்கும் வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகள் மற்றும் எங்களுக்குத் தொலைபேசி, தந்தி மூலம் எமது துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் மற்றும் அன்புள்ளங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (21.04.2008) திங்கட்கிழமை நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வை.தியாகராஜா (கணவர்), குடும்பத்தினர்.

"பாமாவாசா",
புத்தூர் மேற்கு (சிவன்கோயிலடி), புத்தூர்.

இறைவன் வாசலில்
13
.
11
.
1931



இறைவன் பாதத்தில்
21
.
03
.
2008

## திருமதி அன்னம்மா தியாகராஜா

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி)

(73294)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பாதுகாப்புத் தலைமைக்கு எதிரான புதிய வியூக வலை

இலங்கை அரசின் யுத்த வெறிப்போக்கும், அதற்காக உள்நாட்டிலும் சர்வதேச விவகாரங்களிலும் அது நடந்துகொள்ளும் விதமும் பெரும் சர்ச்சைகளையும் சிக்கல்களையும் உருவாக்கி நிற்கின்றன.

மிக மோசமான மனித உரிமை மீறல்களுக்காக இலங்கை சர்வதேச கண்டனங்களுக்கும் அதிருப்திக்கும் உள்ளாகியுள்ளது.

* இலங்கையில் மிகப் பாரதூரமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொறுப்பிலிருந்து சர்வதேசப் பிரமுகர்கள் குழு விலகிவிட்டது. இலங்கை நிலைமை தொடர்பான அதன் கடைசி அறிக்கையில் இலங்கை அரசையும் அதன் செயற்பாட்டையும் அந்தப் பிரமுகர்கள் குழு வாங்குவாங்கு என வாங்கித் தள்ளியுள்ளது.

* சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் எல்லாம் இலங்கையின் போக்குக்கு எதிராகக் கிளர்ந்து நிற்கின்றன. இலங்கையில் அதீதமாக இடம்பெறும் மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்துவதற்காக இலங்கை விடயத்தில் ஐ.நா. நேரடியாகத் தலையிட வேண்டும் என்று அவை அனைத்தும் சேர்ந்து வலியுறுத்தும் நிலைமைக்கு சூழ்நிலை முற்றிவிட்டது.

* மனித உரிமைகளைப் பேணி நிலைநாட்டும் விவகாரத்தில் இலங்கை அரசின் பொறுப்பற்ற போக்குக் காரணமாக, இலங்கைக்கு விசேடமாக வழங்கிவந்த ஏற்றுமதிச் சலுகைகளை ஒரேயடியாக வெட்டும் கட்டத்துக்கு ஐரோப்பிய ஒன்றியம் வந்துவிட்டது. ஆனால் மேற்குலகு எதிர்பார்க்கும் வகையில் - மேற்குலகைத் திருப்திப்படுத்தும் விதத்தில் - தனது நாட்டில் மனித உரிமைகளைப் பேணுவதற்கு வக்கற்ற இலங்கை அரச நிர்வாகம், 'எட்டாப்பழம் புளிக்கும்' என்பது போல "எங்களுக்கு இந்த விசேட ஏற்றுமதிச் சலுகை அவசியமானதல்ல" - என்று இப்போது கூறியிருக்கிறது. ஆக, தமிழர் விரோத நோக்கோடு தான் முன்னெடுக்கும் கொடூர யுத்தத்தைக் கைவிட இணங்காத இலங்கை, அதற்காக மேற்குலகு வழங்கிய விசேட ஏற்றுமதிச் சலுகையையும், அதன் மூலம் பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதியான ஏற்றுமதி வருமானத்தையும் துறக்கத் தயாராகிவிட்டது.

* "இலங்கைப் பிணக்கினால் இங்கு ஜனநாயகக் கட்டமைப்புகளும், சிவில் சமூகமும் பலவீனமடைந்து விட்டன; மனித உரிமை மீறல் துஷ்பிரயோகம் அதிகரித்து விட்டது" - எனத் தெரிவித்துள்ள அமெரிக்க வெளிவிவகார அமைச்சு, இதன் காரணமாக இலங்கைக்கான அமெரிக்க உதவித்திட்டம் 2008 ஐப் போல 2009 ஆம் ஆண்டிலும் கணிசமாக வெட்டிக் குறைக்கப்படுவதாக அறிவித்திருக்கின்றது.

* தமிழர்களுக்கு எதிரான அராஜகப் போரை தீவிரப்படுத்தும் முன்னெடுப்பதற்காகத் துடிக்கும் கொழும்பு, அதற்கான ஆயுதத் தளபாட உதவிகளைப் பெறுவதற்கு சேராத இடமெல்லாம் சேருகின்றது. இதனாலும் இலங்கைக்கு எதிரான கருத்து நிலைப்பாடு சர்வதேச மட்டத்தில் வலுமிக்க நாடுகள் மத்தியில் கடும் விசனத்துக்கு உள்ளாகியிருக்கின்றது. இலங்கையின், பாகிஸ்தானுடனான நெருக்கம் இந்தியாவைச் சீற்ற முற வைத்துள்ளது. சீனாவுடனான ஒத்துழைப்பு அமெரிக்காவை எரிச்சலில் ஆழ்த்தியுள்ளது. ஈரானுடனான அணைவு இஸ்ரேலுக்கு வெறுப்பை ஊட்டியுள்ளது.

அமெரிக்கா இலங்கைக்கான உதவித் தொகையைக் குறைக்கின்றது என்றால், மறுபக்கத்தில் இலங்கை - பாகிஸ்தான் உறவு குறித்து இந்தியா சாடுகின்றது. ஈரானுடன் நெருங்கிச் செல்லும் கொழும்புக்கு உதவ முடியாது என இஸ்ரேல் கைவிரித்து விட்டதாகவும் தகவல்.

- இவை எல்லாம் மனித உரிமைகளை மோசமாக மீறி, தீவிர யுத்த வெறியில் அலையும் கொழும்பின் போக்கை ஒட்டி எழுந்துள்ள மோசமான களநிலைமை பற்றிய சில தகவல்கள் மட்டுமே.

இவற்றுக்கும் அப்பால் கொழும்பு நிர்வாகத்துக்குத் தலையிடி கொடுக்கத்தக்க புதிய விவகாரங்களும் சர்வதேச மட்டத்தில் இப்போது உருவாகி வருகின்றன.

இலங்கையில் அரசுத் தலைமையின் வழிகாட்டுதல், நெறிப்படுத்தலுடன் அல்லது இசைவுடன் முன்னெடுக்கப்படும் மிக மோசமான மனித உரிமை மீறல்களுக்காக இலங்கை அரசுக் கட்டமைப்பைக் கண்டிக்கும் நிலைமையைத் தாண்டி, அரசில் பொறுப்பானவர்களுக்கு எதிராக - தனி ஆள்களுக்கு எதிராக - சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நேரடியாக சட்ட நடவடிக்கை எடுக்கும் எத்தனங்கள் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய வருகின்றது.

முதலில், கொழும்பு அரசுத் தலைமையில் யுத்த நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான உயர்மட்டத்தினருக்கு - அமெரிக்கப் பிரஜா உரிமை பெற்றுள்ள யுத்தத் தீவிரப் போக்காளருக்கு - எதிராக சட்ட முஸ்தீபுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கையில் போர் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பாதுகாப்புச் செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்கப் பிரஜாவுரிமை பெற்றவர். ஜனாதிபதியின் மற்றொரு சகோதரரும், அரசியல் தந்திரசாலியுமான பஸில் ராஜபக்ஷ எம்.பி., இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் அமெரிக்காவில் வசிப்பதற்கான பச்சை அட்டை அனுமதி கொண்டவர்கள். இவர்கள் மூவருக்கும் எதிராகவே ஆரம்பகட்டமாக சர்வதேச நீதிமன்றத்தில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அமெரிக்காவில் ரொனால்ட் றேகன் ஜனாதிபதியாக இருந்தபோது அந்த நிர்வாகத்தின் கீழ் பிரதி சட்டமா அதிபராக இருந்த பிரபல சட்டத்தரணி புரூஸ் பெயினே மேற்படி மூவருக்கும் எதிரான குற்றச்சாட்டுப் பத்திரங்களைத் தயாரித்து வருகின்றார். முன்னாள் சேர்பியத் தலைவர் ஸ்லோபோடன் மிலோஸ்விச்சுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரத்தை மாதிரியாக வைத்தே இவர்களுக்கு எதிரான குற்றப் பத்திரத்தையும் தயார் செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.


யுத்தத்தில் சம்பந்தப்படாத - நேரடியாகத் தொடர்புபடாத - அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றொழித்தமை உட்பட பல மோசமான மனித உரிமை மீறல்களுக்காக சர்வதேச நீதிமன்ற உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்டு பல ஆண்டுகள் விளக்கமறியல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மிலோஸ்விச் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் காலமானார்.

இந்த மோசமான மனித உரிமை மீறல்களை மிலோஸ்விச் நேரடியாகப் புரியாவிட்டாலும், அவருக்குக் கீழ் இருந்த கட்டளைப் படையணிகள் புரிந்த குற்றங்களுக்காக சர்வதேச நீதிமன்றத்தின் முன் அவர் குற்றப் பொறுப்பாளராக நிறுத்தப்பட்டார்.

அதேபோல, இலங்கைப் படைகள் கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்கள் உட்பட அப்பாவிச் சிவிலியன்களின் படுகொலைக்குக் காரணமான கொடுமைகளை இழைத்து வருகையில், அதற்கான தொடர் கட்டளைப் பொறுப்பின் அடிப்படையில் (Doctrine Of Command Responsibility) மேற்படி மூவருக்கும் எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு அமெரிக்காவின் பிரபல சட்டத்தரணியும் முன்னாள் பிரதி சட்டமா அதிபருமான புரூஸ் பெயின் நடவடிக்கை எடுத்து வருகின்றார் என்று தெரிகின்றது.

ஏற்கனவே, தனது மோசமான மனித உரிமைமீறல் போக்குக் குறித்து சர்வதேச மட்டத்தில் எழுந்துவரும் அதிருப்தியைக் கவனத்தில் எடுக்காமல் புறக்கணித்து, உதாசீனத்துடன் செயற்பட்டு, திமிர்த்தனத்துடன் நடந்து வரும் கொழும்பு அரசுத் தலைமை, இப்போது அரசுத் தலைமையில் தனி நபர்களைக் குறிப்பாக இலக்குவைத்து சர்வதேச மட்டத்தில் எடுக்கப்படும் காய் நகர்த்தல்களை - தந்திரோபாய நகர்வுகளை - எப்படி எதிர்கொள்ளப் போகின்றது?

விரைவில் விளைவுகள் வெளிப்பட - விபரீத நிலைமை கொழும்புக்குப் புரியவரும்.



வில்லூன்றி புனித தீர்த்தவாரியில் நேற்று சித்திரா பூரணையை ஒட்டி விசேட கிரிகைகள் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். வில்லூன்றி விநாயகர் தீர்த்தவாரிக்காக வருவதையும் பக்தர்கள் தீர்த்தமாடிப் பிதிர்கிரியைகளை நிறைவேற்றுவதையும் படங்களில் காணலாம்.

# அரிசிக்கு விலைக் கட்டுப்பாடு: படைகளின் உணவு விநியோகத்தையும் பாதிக்கும் நிலை

## திருமண விழாவில் மஹிந்த - ரணில் சந்தித்துப் பேச்சு



சண்டே ரைம்ஸ் களநிலை ஆய்வாளர் இக்பால் அத்தாஸின் ஆய்விலிருந்து...

நடந்தது என்னவோ தனிப்பட்ட ஒரு திருமண நிகழ்வுதான், என்றாலும் நாட்டின் இரு பிரதான தலைவர்கள் சந்தித்து முக்கிய விடயங்கள் பற்றி ஆராயும் நிகழ்வாகவும் அது அமைந்து விட்டது.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடந்த அந்தத் திருமண நிகழ்வுக்கு வந்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒரே மேசையில் அமர்ந்திருந்தார்கள். தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்காவின் புதல்வர் நவிந்திராவின் திருமணத்திற்கு இரு தலைவர்களும் அழைப்பின் மீது வருகை தந்திருந்தனர்.

மணமகனின் சார்பில் விக்கிரமசிங்க திருமணப்பதிவிற்கு சாட்சியாகக் கையெழுத்திட்டார். மணமகள் சார்பில் ஜனாதிபதி ராஜபக்ஷ கையெழுத்திட்டார். அதே மேசையில் ஐ.தே.க. எதிர்ப்பாளர் தரப்புத் தலைவரும் தற்போதைய உள்நாட்டமைச்சருமான கருஜெயசூரியாவும் அமர்ந்திருக்கக் காணப்பட்டார்.

இருதலைவர்களும் அரசியல் நிலைமைகள் பற்றிப் பேசுவதற்கு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டனர்.

வரவிருக்கும் கிழக்கு மாகாணத் தேர்தல் பற்றி விக்கிரமசிங்க பிரச்சினை கிளப்பியதுடன் தனக்கேற்பட்டுள்ள சிக்கல்கள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

### ஹெலிகொப்டர் விவகாரம்

வழமைபோல், ஐ.தே.க.தலைவர் கிழக்கு மாகாணத்திற்குச் செல்ல ராணுவ ஹெலிகொப்டர் ஒன்றை வழங்கும்படி பாதுகாப்புத் திணைக் களத்திடம் ஐ.தே. கட்சியினர் கோரியிருந்தனர். ஆனால் போர் நடவடிக்கைகளுக்குத் தேவைப்படுவதால் ஹெலிகொப்டர்கள் வழங்குவது சாத்தியமில்லையென்று அவர்கள் தெரிவித்துள்ளனர். இது ஐ.தே.கட்சியினருக்கு ஆத்திரத்தை மூட்டியுள்ளது. அரசாங்க உயர் அதிகாரிகள் ஒருசில கிலோமீற்றர் தூரத்திலுள்ள தமது வீடுகளுக்குச் செல்வதற்கும் கூட ஹெலிகொப்டர்களில் ஓடித் திரிகிறார்கள் என்று அவர்கள் சுட்டிக் காட்டினர்.

அதேபோல் பாதுகாப்பு விடயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் A தரத்திலிருந்து B தரத்துக்குக் கீழ் இறக்கப்பட்டுள்ளார். அரசியல் தலைவர்களின் பாதுகாப்புத் தொடர்பாகப் புலனாய்வுத் துறையினரின் கணிப்பின் பிரகாரம் இத்தரக்கணிப்பு செய்யப்பட்டுள்ளது. வேறுபலர் இந்த தரக் கணிப்பில் மேல் உயர்த்தப்பட்டுள்ளனர். எடுத்துக் காட்டாக ஜனாதிபதியின் நெருங்கிய சகாவான போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும இப்பொழுது A தரத்தில் உள்ளார். அதே சமயம் ரவூப் ஹக்கீம் C தரத்துக்கு கீழ் இறக்கப்பட்டுள்ளார்.

### ஜனாதிபதிக்குத் தெரியாதாம்

இந்தப் பிரச்சினையை விக்கிரம சிங்க எழுப்பியபோது தமக்கு ஒன்றுமே தெரியாது என்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஹெலிகொப்டர்கள் எதுவும் பழுது பார்க்கப்பட்டிருக்கலாம் என்று தெரிவித்த ஜனாதிபதி இவ்விடயம் பற்றி ஆராய்வதாகத் தெரிவித்துள்ளார்.

இத்துடன் விடயத்தைக் கைவிட்டு விட ஐ.தே.க. விரும்பவில்லை. அக் குழுவின் தலைவர் ருக்மன் சேனநாயக்க ஜனாதிபதி கொடுத்த வாக்குறுதியையும் நினைப்பூட்டிக் கட்சி யின் கோரிக்கையை ஒரு கடிதம் மூலம் உடனடியாக அனுப்பி வைத்துள்ளார்.

விமானப் படைக்குரிய கட்டணத்தைச் செலுத்தவும் தாங்கள் தயாராய் இருப்பதாகத் தெரிவித்ததுடன், ரணில் பிரதம மந்திரியாகவும் ராஜபக்ஷ எதிர்கட்சித் தலைவராகவும் இருந்த பொழுது இருதடவைகள் ராஜபக்ஷ கிழக்கு மாகாணம் செல்வதற்குக் ஹெலிகொப்டர் வழங்கப்பட்டதையும் ஐ.தே.க. தலைவர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இந்தநிலையில் விக்கிரமசிங்க சிட்னியில் நடைபெறவிருக்கும் சர்வதேச ஜனநாயக யூனியன் கூட்டத்தில் கலந்து கொள்ளப் புறப்பட்டுச் சென்றார். இந்த யூனியனில் உதவித் தலைவராகவிருக்கும் அவர் இம்முறை தலைவராகவும் தெரிவுசெய்யப்படக் கூடிய சாத்தியமிருப்பதாகக் கருதப்படுகின்றது. அங்கிருந்து திரும்பியபின் அடுத்தவாரம் கிழக்கு மாகாணத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவார் என்று தெரிகின்றது.

### அரிசி விலையும் கறுப்புச் சந்தையும்

அன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதியும் அரிசி விலையேற்றம் தொடர்பாகவும் உரையாடியுள்ளனர். கடந்த புதன் நள்ளிரவு தொடக்கம் அரிசி விலைக் கட்டுப்பாடு ஒன்றை அரசு அறிவித்தது. அதன் விளைவாக வியாபார நிலையங்களில் இருந்த கையிருப்புகள் எல்லாம் மாயமாய் மறைந்து விட்டன. முறையாக ஆராயாமல் எடுக்கப்பட்ட அரசின் நடவடிக்கையால் அரிசி கறுப்புச் சந்தைக்குத் தாராளமாகப் போய்ச்சேர உதவியுள்ளது. அதேசமயம் சோற்று பார்சல் விலைகளும் வான் உச்சிக்கு பறக்கத் தொடங்கி விட்டன. இதுவே சாதாரண பொது மனிதனின் ஒரு வேளை உணவாகப் பலகாலமாக இருந்து வந்துள்ளது.

இதற்கிடையில் நீர் வழங்கும் சபையும் விரைவில் 'வற்' வரியை 15 வீதம் அதிகரிக்கப் போவதாக அறிவித்தது. மக்கள் கொந்தளிப்பால் தற்போதைக்கு நிறுத்தி வைத்துள்ளது.

### கண் அவிந்த அரசியல் வாதிகள்

எரிபொருள் விலைகள் அதிகரிப்பும் விரைவில் ஏற்படக் கூடிய சாத்தியம் தென்படுகின்றது.

இம்மாதிரி சந்தர்ப்பங்களில் முந்தைய காலங்களில் மிக பரப்புரைகளுடன் அமைச்சரவை உப கமிட்டிகள் இந்த விடயங்களை ஆராய்வதற்காக நியமிக்கப்படுவதுண்டு. ஆனால் இப்பொழுது விலையேற்றம் அப்படி ஒன்றுமில்லை. அதனால் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பும் இல்லை என்பதாகப் பரப்புரை செய்யப்படுகின்றது. இந்தப் புதிய யுக்தியைப் பரப்பத் தொடங்கியிருப்பவர் அமைச்சரவை அந்தஸ்துப் பெற்ற அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா. வாழ்க்கைச் செலவு எதுவும் அதிகரிக்கவில்லையென்று கூறியிருப்பவர் அவர்தான். அவர் கூறுவது சரிதான் என்றால் நாட்டின் மக்களுக்கு ஏற்பட்டுள்ள திண்டாட்டங்கள் குறித்து பெரும்பாலான அரசியல்வாதிகள் கண் அவிந்து போய் இருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். அந்த மக்கள் தான் இந்த அரசாங்கத்தை அதிகாரத்தில் இருத்தியவர்கள்

### ஆயுதப் படைகளுக்கும் அரிசி கிடைக்காது

இப்பொழுது ஏற்பட்டுள்ள அரிசிப் பிரச்சினையின் குழப்பகரமான இன்னொரு சிக்கல் என்னவென்றால், ஆயுதப் படையினருக்கும் பொலிசாருக்கும் கட்டுப்பாட்டு விலையில் அரிசியை மொத்தமாகக் கொடுக்கக்கூடிய நிலையில் வியாபாரிகள் இல்லை என்பதாகும். இந்த நிலையில் அரசாங்கம் என்ன செய்யும்? கடைகளையும் களஞ்சியங்களையும் முற்றுகைஇடுவதுதான்வழி. இல்லையென்றால் இப்பொழுது 4ஆவது ஈழப் போரில் ஈடுபட்டுள்ள படையினருக்கான உணவு விநியோகம் பாதிக்கப்படும். நாட்டின் அரசியல் கட்டமைப்பை அரிசிப் பிரச்சினை மட்டும் பாதிக்கவில்லை. ஜனதா விமுக்தி பெரமுனைக்குள் ஏற்பட்டுள்ள உள்கட்சி மோதல்களும்தான். அக்கட்சி இப்பொழுது அனேகமாக இரண்டாக உடைந்து விட்டது என்பது உறுதியாகி விட்டது. இரண்டு பகுதியினரும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த வியாழக்கிழமை விமல் வீரவன்ச தலைமையிலான குழுவினர் சந்தித்து நீண்டநேரம் விவாதங்களை நடத்தினார்கள். கட்சியின் சில தலைவர்கள் மிக மோசமாகத் தங்கள் மீது சேற்றை வாரி வீசிவருவதாக பியசிறி விஜயநாயக்க இந்தக் கூட்டத்தில் கூறினார். முழுக் கட்சியையும் குறிவைக்காமல் அந்தத் தனிப்பட்ட நபர்களையே தாங்கள் குறி வைக்க வேண்டும் என்று அவர் கூறினார். எதிர்ப்பவர்களின் கார்களில் குண்டுகளை வைத்தாலும் வைப்பார்கள். அதனால் மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்று ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

## மீண்டும் இணைய முடியாத அளவுக்கு ஜே.வி.பியில் விரிசல்

கட்சித் தலைவர்களுக்குள் இணக்கப்பாடு ஒன்றும் ஏற்படாத பட்சத்தில் தேசப்பற்றாளர் முன்னணி ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பதாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இதற்காக தொழிற்சங்கத்தோடும் பொதுச் சமூக அமைப்புகளுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும்.

அரசாங்கம் தங்கள் பிரிவினரைத் தீவிரமாக ஆதரிப்பது தெரிகின்றதென்று அங்கு எடுத்துக்கூறப்பட்டது.

மேர்வின் சில்வாவும் அவரது குண்டர்களும் ரூபவாஹினியின் நிர்வாகிகளைத் தாக்கியபோது முகத்தை வேறு பக்கத்தில் திருப்பிக் கொண்டிருந்த பொலிசார், ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்கள் களவாடப்பட்ட சம்பவத்தில் மின்னல் வேகத்தில் செயற்பட்டு திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகரனைக் கைது செய்துள்ளனர் என்பது சுட்டிக் காட்டப்பட்டது.

### அடுத்த வாரம் முக்கிய தீர்மானம்

நாங்கள் அடுத்தவாரம் முக்கிய தீர்மானம் ஒன்றை எடுப்போம் என்று விமல் வீரவன்ஸ சண்டே ரைம்ஸிற்குத் தெரிவித்தார். ஆனால் அது என்ன நடவடிக்கை என்று கூறவில்லை.

போட்டிக் குழுவினர் மேலும் தூரவிலகிச் செல்கின்றனர் என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. மீண்டும் இணக்கப்பாடு ஏற்படும் என்பது சாத்தியமாகத் தெரியவில்லை. தாங்கள் மீண்டும் கட்சிக்குத் திரும்புவதனால் ஐ.தே.க.வுடன் நெருக்கமாக இருந்தவர்கள் நீக்கப்பட வேண்டும் என்கிறார்கள் இவர்கள். இது ஜே.வி.பிக்கு சாத்தியமில்லை. அவர்களோ விமல் வீரவன்ஸ குழுவினர் அரசாங்கத்துடன் சரசமாடுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டுகின்றனர்.

வீரவன்ஸ குழு அரசுக்கு உதவுகிறது. அதற்கு ஈடாக அரசும் அவர்களுக்கு உதவுகிறது என்று கடந்த வாரம் சோமவன்ச குற்றஞ்சாட்டியிருந்தார்.

கட்சியின் மத்திய குழு மார்ச் 21ஆம் திகதி எழுப்பியுள்ள கேள்விகளுக்கு வீரவன்ஸ பதில் கூறியாக வேண்டும். இல்லையெனில் மே 10 ஆம் திகதியுடன் அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுவிடுவார் என்பது அவர்களின் நிலைப்பாடு. (ப)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 10 | 22.04.2008 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: துதியை | மு.இ. 07.33வரை |
| நட்சத்திரம் : | விசாகம் |
| | மு.இ. 08.27 வரை |
| சுபநேரம் : | 10.30 - 12.00 |
| ராகுகாலம் : | 03.00 - 04.30 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு விழா (21.04.2008)

## புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய அதிபர்

## உயர்திரு. நல்லதம்பி இராசதுரை SLPS-2-II

## (விஷேட விஞ்ஞானம்)



உயர்திரு. நல்லதம்பி இராசதுரை S.L.T.S -2-II

| | |
|---|---|
| பிறந்த இடம் - | புங்குடுதீவு - ஊரதீவு |
| பிறந்த திகதி - | 14.09.1948 |
| ஆரம்பக் கல்வி - | புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாலயம் |
| இடைநிலைக் கல்வி - | புங்குடுதீவு மகா வித்தியாலயம் |

### கல்விப் பணி

21.04.1979 - 30.04.1979
ஆசிரியர், கிளி/ பூநகரி வலைப்பாடு றோ.க.வித்தியாலயம்

01.05.1979 - 31.12.1981
ஆசிரியர், கிளி/சென். திரேசா மகளிர் வித்தியாலயம்

01.01.1982 - 31.12.1983
பலாலி ஆசிரிய கலாசாலை

01.01.1984 - 30.04.1991
ஆசிரியர், மு/கற்சிலை மடு அ.த.க.பாடசாலை

01.05.1991 - 31.05.1996
ஆசிரியர், யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்

01.06.1996 - 03.08.2000
பதில் அதிபர், யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்

04.08.2000 - 21.04.2008
அதிபர், யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்

### புன்முறுவலுடன் வரவேற்கும் பாங்கு



அதிபர் உயர்திரு ந.இராசதுரை அவர்களின் பணியைக் கௌரவிக்கும் முகமாக வெளிவரும் சிறப்பு மலருடாக வாழ்த்துவதில் பேருவகையடைகிறேன். 1996இல் மீளக்குடியேறிய பின் புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தைக் கட்டியெழுப்புவதில் மிகப்பெரும் பணியை இவர் ஆற்றியுள்ளார்.

தனது குடும்பத்தினருடன் அப்பிரதேசத்திலே வசித்து அங்குள்ள குழந்தைகளுக்கு பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் சீரிய கல்விப் பணியினை இவர் புரிந்துள்ளார். அப்பிரதேசத்தின் சமூகக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதிலும் இவரது பணி மேலோங்கியிருந்தது. குறிப்பாக புங்குடுதீவு சிவன் கோயிலின் திருப்பணிகளை நிறைவேற்றி மகாகும்பாபிஷேகத்தினை சீரிய முறையில் நடத்துவதில் இவருடைய பங்களிப்பு உயர்வாக இருந்தது.

அங்கு நாம் செல்லும் போதெல்லாம் புன்முறுவலுடன் வரவேற்று உபசரிப்பார். சிறந்த பேச்சாற்றலும் பிரதேசப் பற்றும் நிறைந்த இவர் ஆற்றிய ஆசிரிய, அதிபர் பணி போற்றுவதற்குரியது. இன்று ஓய்வு பெறும் இவர் குடும்பத்தினருடன் சந்தோஷமாக நீண்ட காலம் வாழ்ந்து சமூகப் பணிகளும் புரிய இறைவன் அருள்புரிவாராக.

**ப.விக்னேஸ்வரன்**
வலயக் கல்விப்பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம்.

### பண்பாளனின் பணி தொடரட்டும்




புங்கை நகர் தன்னில் புகழ் பூத்த குடும்பத்தில் தோன்றி கல்விப்பணியை கடவுட்பணியாக மேற்கொண்டு 21.04.2008 அன்று முதல் ஓய்வுபெறும் அதிபர் உயர்திரு. நல்லதம்பி இராசதுரை அவர்களின் சேவையை நினைவு கூருவதில் பெருமகிழ்வடைகின்றேன். 1991 இல் தீவக மக்கள் இடம்பெயர்ந்து பின்னர் 1996 இல் மக்கள் மீளக் குடியமர்ந்த காலகட்டத்தில் பலர் இப் பிரதேசத்திற்கு சேவை செய்ய பின்நின்ற வேளையில் அன்னார் யா/புங்குடுதீவு ஸ்ரீ கமலாம்பிகை வித்தியாலயத்தின் அதிபர் பதவியைப் பொறுப்பேற்று பாடசாலையை மீளவும் புத்துயிர் பெற்று செயற்பட வைத்த செயல்வீரன் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றை அணிகலனாகக் கொண்டு மாணவர் கல்வி அபிவிருத்திக்குத் துணை நின்ற அர்ப்பணிப்பு மிக்க சேவையாளன்.

ஒரு நிறைவான பணியைத் திருப்பதியாகச் செய்து இன்றுடன் ஓய்வுபெறும் பண்பாளனின் பணி மேலும் தொடரவும் பல்லாண்டு காலம் நலத்தோடு வாழவும் நயினை நாகபூசனி அம்பாள் அருள் புரியட்டும்.

**G.V.இராதாகிருஷ்ணன்**
பதில் வலயக் கல்விப் பணிப்பாளர்,
தீவக கல்வி வலயம், வேலணை.

### ஊரை நேசித்ததால் ஊரவரால் நேசிக்கப்பட்டார்



யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தின் அதிபர் ந.இராசதுரை தான் பிறந்து வாழ்ந்த மண்ணில் கல்விச் சேவையாற்றி ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக பலபடிநிலைகளில் தன்மை வளர்த்து தான் சார்ந்த மண்ணிற்கு அளப்பரிய சேவை செய்துள்ளார். பாடசாலையின் குறைந்த வளங்களைக் கொண்டு நல்ல பெறுபேறுகளை ஈட்ட அரும்பணியாற்றியுள்ளார். இக்கட்டான கலாகட்டங்களில் பாடசாலையை சிறப்பாக வழி நடத்தினார். சிறந்த நாடகக் கலைஞன். எங்களோடு சேர்ந்து கல்விப் பணியாற்றிய அதிபரை வாழ்த்துவதோடு ஓய்வு காலம் சுபீட்சமாக அமைய வாழ்த்துகின்றேன்.

**சு.சரவணபவானந்தன் ஜே.பி.,**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,வேலணை.

### மாணவர்களின் உயர்வில் கண்ணாக இருந்தார்


எமது பாடசாலையின் ஆசிரியராக, அதிபராக நீண்டகாலம் சேவையாற்றி தமது சேவையை இன்றுடன் பூர்த்தி செய்து இளைப்பாறும் அதிபர் அவர்கள் ஆசிரிய குழாத்துடன் இனிமையாக பேசி, இணக்கமாக பழகி வேலை வாங்கும் திறன் வாய்ந்தவர். அவர் நிர்வாகத்தை கையாளும் முறை லாவகமானதாகும்.

சிரித்த முகத்துடன் எல்லோரிடமும் அன்பாகவும், பண்பாகவும் பழகும் கருணை உள்ளம் அவருக்கு சொந்தமானதாகும். மாணவர்களுக்கு பிரதிபலன் கருதாது இலவசமாக கல்விக் காலம் முழுவதும் விசேட வகுப்புகளை நடத்தி கல்வித் தரத்தையும், பெறுபேற்றையும் உயர்த்திய உத்தமகுணம் எவராலும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

வாய்ப்பு வசதி குறைந்திருந்தும் இந்த வருடம் 5ஏபி2சி2எஸ் பெறுபேறு சாதாரணதரத்தில் கிடைத்தமைக்கு அதிபரினதும் ஆசிரியர்களினதும் ஊக்கமே காரணம். அவரை உளமார வாழ்த்தி நன்றியையும் பாராட்டையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**திருமதி மகாராணி கணேசன்,**
உபஅதிபர், யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தி.

### மண்ணையும் தொழிலையும் நேசித்த முதல்வர்



கல்விப் பணியில் இருந்து ஓய்வுபெறும் அதிபர் ந.இராசதுரை அவர்கள் சமய, சமூகப் பணிகளிலும் தான் பிறந்த மண்ணை மிக ஆழமாக நேசிப்பதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவர். புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தில் பணியாற்றும் போது 1990களில் பின்னர் இவருடன் பழகும் வாய்ப்புக்கள் ஏற்பட்டன.

"புங்குடுதீவுப் பிரதேசத்தின் கல்வியின் மீள் உருவாக்கத்தில் இராசதுரை அவர்கள் குறிப்பிடத்தக்கவர். 1996 மார்ச் - ஏப்ரல் மாதங்களில் புங்குடுதீவில் மீளவும் கல்விப் பணியை ஆற்றுவதில் பல இடர்களுக்கு முகங்கொடுத்து துணிச்சலோடு செயற்பட்ட அதிபர் இவராவார். இந்த வகையில் புங்குடுதீவு பிரதேச கல்வி அபிவிருத்தி வரலாற்றுப் பிரிவில் இவரது தடம் துல்லியமானது என்பதை யாவரும் அறிவார்கள். கல்விப் பணியை செய்தவர்களின் தொண்டுகளை சில வேளைகளில் பல மனிதர்கள் மறந்து விடுவார்கள். ஆனால் காலம் எல்லோரையும் மிக ஆழமாக பதித்து நிற்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஓய்வுகாலம் சிறக்கவும் புங்குடுதீவுப் பிரதேச மீள் உருவாக்குதலிலும் தொடர்ந்து பணியாற்ற வேலணை மத்திய கல்லூரிச் சமூகத்தின் சார்பில் வாழ்த் துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

**பொன்னம்பலம் அருணகிரிநாதன்,**
முதல்வர்,வேலணை மத்திய கல்லூரி.

### சமயப் பணியிலும் தடம் பதித்தவர்



இன்று மணிவிழாக் காணும் மாண்புமிகு நல்லதம்பி இராசதுரை அதிபர் அவர்கள் எனது மதிப்பிற்குரியவர். அவருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் வெகு மகிழ்ச்சி அடைகிறேன். இவரும் நானும் புங்குடுதீவு ஊரதீவுக் கிராமத்தில் பிறந்து ஒன்றாக வளர்ந்தவர்கள். வயதில் சிலகாலம் மூத்தவராக இருந்தவர். கிராமத்து இளைஞர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்துப் பள்ளிப் பருவ காலத்தில் "புங்குடுதீவு இளம் தமிழர் மன்றத்தை" உருவாக்கியவர். அதில் செயலாளராக பணிபுரிந்து வழிகாட்டியாக திகழ்ந்தவர். பின்னர் ஊரதீவு கிராமமுன்னேற்றச் சங் கம், ஊரதீவு சனசமூக நிலையம் என்பவற்றில் தலைவராகவும் செயலாளராகவும் அளப்பரிய சேவை செய்தவர். அதனால் அன்று "ஆசிரியமணி" எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர்.

அன்று தொட்டு இன்றுவரை அறிவு, திறன், மனப்பாங்கு என்ப வற்றை மாணவச் செல்வங்களுக்கு வழங்கி அயராது உழைத்தவர். அத்துடன் நின்றுவிடாது ஈழத்து இராமேஸ்வரம் என்றழைக்கப்படும் புங்குடுதீவு பாணாவிடை சிவன் ஆலயத்தில் செயலாளராகவும் பொருளாளராகவும் நீண்டகாலம் இறைத் தொண்டு புரிந்த பெருமகன். இரண்டு தடவை, குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) செய்துநிறைவு கொண்டவர். அதனால் ஆலய தருமகர்த்தாசபையினர் இவருக்கு "சிவநேசசெல்வர்" எனும் பட்டம் வழங்கி கௌரவித்திருந்தனர்.

மீண்டும் ஊர் திரும்பியபொழுது புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தை அங்கு ஆரம்பித்து வளம்மிக்க ஒரு பாடசாலையாக மாற்றியமைத்தவர்.

இன்று ஓய்வுபெறும் அவரும் அவரது குடும்பத்தவர்களும் ஓய்வு காலத்தில் சகல வளங்களையும் பெற்று வாழ எல்லாம் வல்ல பர்வ பத்தினி இராமலிங்கேஸ்வரப் பெருமானின் இறையருளை வேண்டிப் பிரார்த் திக்கின்றேன். வாழ்க வளமுடன்.

**S.K. சண்முகலிங்கம் J.P.**
அதிபர், யா/புங்குடுதீவு கணேச மகா வித்தியாலயம்,
தவிசாளர், வேலணை பிரதேச மத்தியஸ்தர் சபை.

### சிறந்த அதிபர்



புங்குடுதீவில் மடத்துவெளி, ஊரதீவு ஆகிய இரு கிராமங்களை உள்ளடக்கிய மாணவர்களுக்கு கல்வி அறிவூட்டும் நிறுவனமாக யா/புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயம் திகழ்கின்றது. இதன் ஆசிரியராகவும் பின் அதிபராகவும் நீண்ட காலம் சேவையாற்றி இன்று ஓய்வுபெறும் ந.இராசதுரை அவர்களின் அர்ப் பணிப்புடனான சேவையை பாராட்டுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். 5 வருடகால இடப்பெயர்வினால் அழிந்து சிதைந்து போன இப் பாடசாலையை மீளக் கட்டி எழுப்புவதிலும், மாணவர்களின் இழந்த கல்வியை மீட்டலிலும் இவரது பங்கு அளப்பரியது. ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய காலங்களில் கணித, விஞ்ஞான பாடங்களை மாணவருக்குக்குத் தானே கற்பித்தமையும், மாலைநேரங்களில் தனது வீட்டையே பாடசாலையாக மாற்றி கல்வி அறிவூட்டியமையும் அவரின் தன்னலமற்ற சேவைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். ஓய்வுக் காலத்தில் தம் மனைவி பிள்ளைகளுடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறேன்.

**க.தர்மகுணசிங்கம்,**
அதிபர், யா/புங்குடுதீவு ம.வி.

### எண்ணியதை முடிக்கும் அதிபர்




மதிப்பிற்குரிய அதிபர் ந.இராசதுரை அவர்கள் மணிவிழாக்காணும் இந்நாளில் வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றேன்.

யாழ்.புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தில் அதிபராக நீண்ட காலம் கடமையாற்றி ஓய்வு பெறுகிறார். இவர் நாடகக் கலையில் தலை சிறந்து விளங்கியவர். ஊரதீவு இளைஞர் மன்றத்தின் கலை விழாக்களில் பேச்சுப் போட்டிகள், பட்டிமன்றங்கள், நாடகநிகழ்ச்சிகள் போன்றவற்றில் பங்கேற்று நடத்தி வந்துள்ளார். பாடசாலை விளையாட்டு விழாக்கள், கலைவிழாக்கள் போன்றவற்றிற்கு தலைமைதாங்கி திறம்பட நடத்தி வந்தவர்.

இதைவிட இவரின் முக்கியபணி பாணாவிடை சிவனுக்கு தொண்டு செய்வதாகும். ஆலய பரிபாலன சபையின் முக்கிய பதவியையும் வகித்து வந்தார். இவர் கல்விச் சேவை மாத்திரமன்றி சமூக சேவைகள், ஆலயத் தொண்டுகள் போன்றவற்றிலும் ஈடுபட்டுள்ளவராகத் திகழ்ந்தார். ஓய்வுபெற்று மணிவிழாக்காணும் அதிபரை என்றும் இறையருள் பெற்று நல்லாசிகளுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

**த.தவராசா,**
ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர், தீவகம், புங்குடுதீவு.

### வாழ்த்துச் செய்தி




புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தில் அதிபர் வரிசையில் மிகச்சிறப்பாகப் பணியாற்றி அகவை அறுபதில் ஓய்வுபெற்றுச் செல்லும் ந. இராசதுரை அவர்களை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இப்பாடசாலையில் சிறந்த விஞ்ஞான ஆசிரியராகவும் பத்து வருடங்களுக்குமேல் அதிபராகவும் சேவையாற்றி சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டார்.

1990ஆம் ஆண்டு தீவக மக்கள் இடம்பெயர்ந்து பின் 1996ஆம் ஆண்டு மக்கள் மீளகுடியேற சந்தர்ப்பம் கிடைத்தது. இதன்போது முதன் முதலில் தனது கிராம பாடசாலையை திறக்க வேண்டும் என துணிச்சலுடன் பாடுபட்டு பாடசாலையை ஆரம்பித்த பெருமை அதிபர் ந. இராஜதுரை அவர்களையே சாரும்.

இவர் ஓய்வகாலத்தில் தேக ஆரோக்கியத்துடன் நீடுழி காலம் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**மு.மகேந்திரன்**
முன்னாள் அதிபர், புங்குடுதீவு, கமலாம்பிகை வித்தியாலயம்.


### கூட்டுறவுத் துறையின் கலங்கரை விளக்கு



"தன்னைப் போல் பிறரையும் நேசி" என்பது உயர்ந்தோர் வாக்கு. இந்த வகையில் கல்வியையும், கடமையையும், பதவியையும் ஒரே பாங்கில் வைத்து பணிபுரிந்தவர். இன்று இளைப்பாறும் அதிபர் நல்லதம்பி இராசதுரை அவர்கள். இவர் நான் பிறந்த கிராமத்தில் கூட்டுறவு துறையை வளர்ப்பதற்கு முன்னின்று உழைத்தவர். அங்கு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும் உரிய நேரத்தில் உரிய பொருள்களை பெற்றுக் கொடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். புங்குடுதீவு -நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளை இலக்கம் ஒன்றில் நீண்ட கால அங்கத்தவராகவும் அதன் தலைவராகவும் பொதுச் சபை உறுப்பினராகவும் பதவி வகித்து அக்கிளையின் நன்மதிப்பை வளர்த்தவர். அத்துடன் சைவத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டும் என்ற விருப்புடன் பல பொது அமைப்புகளை நிறுவி அதன் மூலம் மக்களுக்கு சேவை செய்யும் திறன் மிக்கவர். எனவே இவர் கல்வி உலகிற்கும் கூட்டுறவுத் துறைக்கும் கலங்கரை விளக்காக நிலைத்து நிற்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**செ.வ.செல்வதுரை,** பொது முகாமையாளர்,
புங்குடுதீவு- நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்.

### கல்விப் பணியுடன் சமூகப்பணியும்



எமது கிராமத்தில் பிறந்து நம் கிராம அபிவிருத்தியிலும் ஆலய விருத்தியிலும் இளமையில் இருந்தே உழைத்து ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றி எமது கிராமச்சிறார்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறையும் ஊக்கமும் கொடுத்து உயர்த்திய எமது அதிபர் இன்று தனது சேவையில் இருந்தது ஓய்வு பெறுகிறார்.

இளைஞர்களை ஒன்றுகூட்டி புங்குடுதீவு இளந்த அமைத்து அரசியல், சிரமதானம், கல்வி வளர்ச்சி என்பவற்றை வளர்த்தவர். ஆசிரியர், அதிபர் பணிமூலம் பாடசாலையை எழில் மிக்கதாகவும் மாணவர் கல்வி மட்டத்தை உயர்த்தி எமது வித்தியாலயம் மிளிர உழைத்த சிறந்த அதிபராவார். அவருக்கு எமது கிராம மக்கள் சார்பாக நன்றியையும் பாராட்டையும் இதன்மூலம் உரித்தாக்குகின்றோம்.

**நா.ஜெகதீசன்,**
அறங்காவலர், அருள்மிகு ஞான வைரவர் ஆலயம்
புங்குடுதீவு - 7

### கல்விப் பூங்காவாக்கியவர்

எமது வித்தியாலயத்தில் பதினொரு வருடங்களாகச் சேவையாற்றி இன்று இளைப்பாறிச் செல்லும் எமது அதிபருடன் ஒன்றிணைந்து பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளராக கடமையாற்றியவன் என்ற வகையில் அவர் செயற்திறன் மிக்கவர் என்பதை நன்கு தெரிந்தவன். வறிய மாணவர்களுக்கு உதவும் மனப்பாங்கு கொண்டவர்.

சிதைந்து கிடந்த பாடசாலையை எழில் மிக்க கல்விப் பூங்காவாக மாற்றியமைத்த பெருமை அவருக்குரியதாகும். கணிதபாட அடைவு மட்டத்தை உயர்த்த விஷேட வகுப்பு வைத்து பாடுபட்டமை வீண்போகவில்லை. இந்த வருட க.பொ.த.(சா.த.) பரீட்சை முடிவில் கிடைத்த 'ஏ'தரச் சித்தியை நான் இங்கு குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கல்வி வளர்ச்சி மற்றும் சமூக சேவையில் அர்ப்பணிப்புடன் செய்த சேவையை வாழ்த்தி ஓய்வு காலத்திலும் அவரது சேவை தொடர வேண்டுமென இறைவனை வேண்டுகிறேன். அவரும் அவரது குடும்பத்தினரும் பல்லாண்டு வாழ்க வளமுடன்.

**கு.செல்லத்துரை,** செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுதல் வெற்றியைப் பறிகொடுத்தது பாகிஸ்தானிடம் பங்களாதேஷ்!

பங்களாதேஷ், பாகிஸ்தான் அணிக்கு இடையில் காரச்சி மைதானத்தில் பகல் இரவாக நடைபெற்ற ஐந்தாவதும் இறுதியுமான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி 150 ஓட்டங்களால் அமோக வெற்றி ஈட்டியது.

இதன்படி பாகிஸ்தான் அணி 5 - 0 என்ற கணக்கில் தொடரை சுவீகரித்துக் கொண்டது.

ஐந்தாவது ஒருநாள் போட்டியில் ஆறுதல் வெற்றியை அடைவதற்காக போராடிய போதிலும் அது பங்களாதேஷ் அணிக்கு வாய்ப்பாக அமையவில்லை.

இரு அணிகளுக்கும் இடையில் இடம்பெற்ற இறுதிப் போட்டியின்போது நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

பாகிஸ்தான் அணி அதன் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களின் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 329 ஓட்டங்களை குவித்தது.

இதன்படி பாகிஸ்தான் அணியின் ஆரம்பத்துடுப்பாட்டவீரர் சல்மான் பட் 124 பந்துகளை எதிர்கொண்டு 136 ஓட்டங்களை குவித்தார். இதில் ஒருஸிக்சரும், 14 பவுண்டரிகளும் அடங்குகின்றன.

அதனைத் தொடர்ந்து பின்வரிசை வீரான யூனிஸ்கான் 69 ஓட்டங்களையும் மிஸ்பா - ஹுல் - அக் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக மஷ்ரஃபி மோட்டாஸா நான்கு விக்கெட்டுகளையும் ஷாடட் ஹொசைன் மூன்று விக்கெட்டுகளையும் அப்துர் ராசக் இரு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

துடுப்பெடுத்து ஆடிய பங்களாதேஷ் அணி 48.8 ஓவர்கள் முடிவில் 179 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

பங்களாதேஷ் அணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் எவரும் பிரகாசிக்காத நிலையில் பின்வரிசை வீரர்களான முஹம் மதுல்லா 37 ஓட்டங்களையும் அணித் தலைவர் முகமட் அஷ்ரவ்புல் 30 ஓட்டங்களையும் பந்து வீச்சாளரான அப்துர் ரசாக் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக முகமட்அசிப், ஷயிட் அவ்றிடி ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுகளையும் உமர் குல், வெஹெப் ஆகியோர்தலாஇரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக மொகமட் அசிப் தெரிவுசெய்யப்பட்டதுடன் தொடரின் சிறப்பாட்டக்காரராக சல்மாண்பட்டும் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## டில்லி டெயார் டெவில்ஸ் வெற்றி

இந்திய பிரிமியர் லீக் ருவென்ரிக்கு 20 மூன்றாவது போட்டியில் விரேந்தர்செவாக் தலைமையிலான டில்லி டெயார்டெவில்ஸ் அணி 9 விக்கெட்டுக்களால் அமொக வெற்றி ஈட்டியது.

நேற்றுமுன்தினம் டில்லி பெரோஸ் ஷா கொட்லா மைதானத்தில் ராஜஸ்தான்றோயல்ஸ் அணிக்கும் டில்லி டெயார் டெவில்ஸ் அணிக்கும் இடையில் போட்டி நடைபெற்றது.

இதன்படி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 129 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

பதிலெடுத்தாடிய டில்லி டெயார்டெவில்ஸ் அணி 15.1 ஓவர் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 132 ஓட்டங்களைப் பெற்று இலகுவாக வெற்றி ஈட்டியது.

# சென்னை சுப்பர் கிங்ஸின் அதிரடி ஆட்டத்தில் கோட்டை விட்டது "கிங்ஸ் XI" பஞ்சாப் அணி

இந்திய பிரிமியர் லீக் ருவென்ரிக்கு 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இரண்டாவது போட்டி, கிங்ஸ் ஙீஜ பஞ்சாப் அணிக்கும் சென்னை சுப்பர்கிங்ஸ் அணிக்கும் இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இப்போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி33ஓட்டங்களால்வெற்றிபெற்றது.

சென்னை சுப்பர்கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 240 ஓட்டங்களை பெற்றது.

இப்போட்டியின் முன்வரிசை துடுப்பாட்ட வீரர் மைக்ஹசி 54 பந்துகளை எதிர்கொண்டு 116 ஓட்டங்களை குவித்தார்.இதில் 9 ஸிக்சர்களும், 8 பவுண்டரிகளும் அடங்குகின்றன.

சென்னை சுப்பர்கிங்ஸ் அணிக்கு இந்திய அணியின் தலைவர் மகேந்திரா சிங் தோனி தலைமை வகித்தார்.

பந்து வீச்சில் கிங்ஸ் ஙீஜ பஞ்சாப் அணி சார்பாக ஹிர்வான்பதான் இரு விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

241 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலளித்துத் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி அதன் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் நான்கு விக்கெட்டுகளை இழந்து 207 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இந்த அணிக்கு இந்திய அணியின் துடுப்பாட்டவீரர் யுவராஜ் சிங் தலைமை தாங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

பஞ்சாப் அணி சார்பாக முன்வரிசை வீரர்களான ஹோகுமார் மற்றும் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரரான குமார் சங்கக்கார ஆகியோர் ஓட்டங்களை குவித்தனர்.

ஹோப்ஸ் 33 பந்துகளை எதிர்கொண்டு 71 ஓட்டங்களை குவித்தார். இதில் 10 பவுண்டரிகளும், 3 ஸிக்சர்களும் அடங்கின்றன. குமார் சங்கக்கார 33 பந்துகளை எதிர்கொண்டு 54 ஓட்டங்களை குவித்தார். இதில் 5 பவுண்டரிகளும், 2 ஸிக்சர்களும் அடங்குகின்றன.

பந்து வீச்சில் சென்னை சுப்பர்கிங்ஸ் அணி சார்பாக இலங்கை அணியின் நட்சத்திர சுழல் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன், கோணி, அமர்நாத், ஜோகிந்தர் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.இப்போட்டியின் மைக்ஹசி ஆட்டநாயகனாக தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சோமாலியா வில்மோதல்; 27 பேர் உயிரிழப்பு

சோமாலிய தலை நகரான மொகடிஷூவில் எதியோப்பிய படை வீரர்களுக்கும், இஸ்லாமிய தீவிரவாத போராளிகளுக் கு மிடையே சனிக்கிழமை கடும் சண்டை நடைபெற்றது. இதில் 27 பேர் கொல்லப்பட்டனர்.12 பேர் காயமுற்றனர் என நேரில் கண்டவர்களும் மருத்துவமனை அதிகாரிகளும் தெரிவித்துள்ளார்கள்.

கொல்லப்பட்ட 27 பேரில் 11 சிவிலியன்களும், 9 எத்தியோப்பிய வீரர்களும்,7 இஸ்லாமிய போராளிகளும் அடங்குவர். சண்டை சனிக்கிழமை அதிகாலை ஆரம்பமாகியது. துப்பாக்கிப் பிரயோகங்களும், ஆர்ட்டிலறித் தாக்குதல்களும் சரளமாக இடம்பெற்றன என்றும் அவர்கள் விவரித்துள்ளார்கள்.

# தலைநகர் பீஜிங்கிலும் ஏனைய சீன நகரங்களிலும் பிரான்ஸுக்கு எதிராக ஆட்சேபப் பேரணிகள்

## திபெத்திய சுதந்திரப் போராட்டத்துக்கு உதவுவதாகப் புகார்



பீஜிங், ஏப்.21

சீனாவின் தலைநகர் உட்பட அநேக நகரங்களில், பிரான்சுக்கு எதிரான ஆர்ப்பாட்டப்பேரணிகள் நடத்தப்பட்டன. ஆர்ப்பாட்டக் காரர்கள், பிரான்சின் உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டாமென்றும், அவற்றைப் பகிஷ்கரிக்குமாறும் கோரிக்கை விடுத்தார்கள். திபெத்திய சுதந்திரத்துக்காக அது செயல்படுகிறது என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள் என அங்கிருந்து வெளியாகியுள்ள ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பீஜிங்,வூஹான், ஹெபிகுன்மிங், குயிங்டாவோ ஆகிய நகரங்களில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணிகளில் ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

பிரான்சுக்காரருக்குச் சொந்தமான வர்த்தக நிறுவனங்களுக்கு எதிரில் பிரான்சுக்கு எதிரான கோஷங்களை எழுப்பி, ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பரித்தார்கள் என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன.

பிரான்ஸின் தலைநகரான பாரிஸில், ஒலிம்பிக் தீப ஊர்வலம் வரும்போது, இடையூறுகள் விளைவிக்கப்பட்டுள்ளன. சீனாவில் ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெறுவதற்கு எதிராக ஆட்சேபக் குரல்களும் எழுப்பப்பட்டுள்ளன. இவையாவும் சீனாவை அவமதிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என ஆர்ப்பாட்டக்காரர்கள் பரவலாக புகாரிட்டு ஆவேசமடைந்தார்கள் என்றும் ஊடகத் தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

'திபெத்திய சுதந்திரத்தை எதிர்ப்போம், ஒலிம்பிக்கை ஆதரிப்போம்' என்ற வாசகங்கள் ஒரு பதாகையில் பொறிக்கப்பட்டிருந்தன. "பிரான்சு பொருட்களைப் பகிஷ்கரிப்போம். பிரான்சுப் பொருட்களுக்கு விடை கொடுப்போம்" என்ற வாசகங்கள் பிறிதொரு பதாகையில் பொறிக்கப்பட்டிருந்தன என்றும் அவை குறிப்பிட்டுள்ளன.

இன்னும் பல அட்டைகளில், பிரான்சின் தேசியக் கொடிமீது, நாஸிகளின் சுவாஸ்திகா இலச்சினை பொறிக்கப்பட்டிருந்தது. பிரான்சின் வர்த்தக மையம் அமைந்துள்ள கெரிபோர் சுப்பர் மார்க்கெட் பகுதியில் பெருந்தொகையான ஆர்ப்பாட்டக்காரர்கள் திரண்டு நின்று எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பினார்கள் என்னும் தகவல்களும் வெளியாகியுள்ளன.

(சி)

# எம் ஆதரவாளர்கள் மீதான தாக்குதல் நிறுத்தப்படாவிட்டால் பகிரங்க யுத்தம்

## ஈராக்கிய அரசுக்கு மொஹ்டடா எச்சரிக்கை



ஈராக்கின் கடும்போக்கு ஷியா மத குருவான மொஹ்டடா சத்ர்,தமது ஆதரவாளர்களுக்கெதிரான தாக்குதல்களை பக்தாத் அரசாங்கம் நிறுத்தாவிட்டால் அதற்கு எதிராக பகிரங்க யுத்தமொன்றை மேற்கொள்ள நேரிடுமென எச்சரிக்கையொன்றினை விடுத்துள்ளார்.

'இது எனது இறுதி எச்சரிக்கையாகும். தாக்குதல் நடவடிக்கைகளை கைவிட்டு, அமைதி வழியை- சமாதானப் பாதையை அரசு ஏற்கவேண்டும்' என அவர் தாம் விடுத்துள்ள அறிக்கையொன்றில்வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்கப்படைகளினதும், பிரிடிஷ் படைகளினதும் உதவியோடு, ஈராக்கிய துருப்புகள் தலை நகரான பக்தாத்திலும் தென் ஈராக்கிலும் மொஹ்டடா சத்ரின் மெஹ்தி இரா ணுவத்தோடு கடுமையாக மோதியுள்ள ஒரு தருணத்தில், மொஹ்டடாவின் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

கடந்த வருட ஓகஸ்ட்டில் அரசுக்கோ, வெளிநாட்டுப் படை வீரர்களுக்குகோ எதிராக தாக்குதல் மேற்கொள்ளப்படமாட்டாது என, மெஹ்தி இராணுவம் வாக்குறுதி அளித்திருந்தது. அத்துடன் யுத்த நிறுத்தப் பிரகடனமும் செய்திருந்தது.

எனினும் சமீபத்தில் யுத்த நிறுத்தம் முறிவுகண்டு, மோதல்கள் மூண்டுவந்துள்ளன. இச் சமயத்தில் மொஹ்டடா இறுதி எச்சரிக்கையொன்றினை விடுத்துள்ளார். அத்துடன் இதுதான் கடைசி வார்த்தையுமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசு சுய உணர்வுக்குத் திரும்பி, சமாதானத்துக்கான பாதையை ஏற்க முன்வரவேண்டும். தவறும் பட்சத்தில் முன்னைய அரசாங்கம் எதிர்கொண்ட அதே விளைவுகளையே எதிர்கொள்ள நேரிடும் என்றும் மொ[illegible]ட்டா மேலும் எச்சரித்துள்ளார். இவர் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹூஸைனின் வீழ்ச்சிகண்ட ஆட்சியை நினைவுறுத்தியே இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளார் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.


**வீடு விற்பனைக்கு**

பண்டத்தரிப்பு சந்திக்கும் சந்தைக்கும் இடையில் பிரதான வீதியில் சகல வசதிகளும் கொண்ட 3 பரப்பு காணியுடன் கூடிய வீடு உடன் விற்பனைக் குண்டு. (அம்பாள் தடைக்கு முன்பாக)

தொடர்பு: [illegible]

பத்திரிகை நி[illegible]

பண்டத்தரிப்பு.

(73366)



**சிவாச்சார்யாபிஷேக அழைப்பு**

அச்செழு பிள்ளையார் அம்பாள் ஆலய அர்ச்சகர் பிரம்மஸ்ரீ

கு.சிதம்பரேஸ்வர சர்மா-ஜெயலட்சுமி அம்மா தம்பதிகளின்

கனிஷ்ட புத்திரன்

**சிரஞ்சீவி பிரம்மஸ்ரீ**

**கிருஷ்ணமூர்த்தி சர்மா**

அவர்களுக்கு இன்று (21.04.2008) திங்கட்கிழமை காலை 6 மணி முதல் 7.20 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில். அச்செழு பிள்ளையார் அம்பாள் ஆலய மண்டபத்தில் சிவாச்சார்யாபிஷேகம் நடைபெறும். அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அச்செழு,
நாவலி.

(73367)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரை நிறுத்துமாறு இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் கடும் அழுத்தம்!

## இந்தியாவை விட கடும் போக்கைக் கடைப்பிடிப்பதாக இலங்கை விசனம்!!

கொழும்பு, ஏப் .21

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது என்றும் இந்தியா தெரிவிக்கும் எதிர்ப்பை விட இது அதிகமானது என்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலும் இந்தியாவிலும் உள்ள விடுதலைப் புலி ஆதரவாளர்கள் இராணுவ நடவடிக்கையை இலங்கை அரசு நிறுத்த வேண்டும் என்று பிரசாரம் செய்து வருகின்றனர் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

சிறிய பயங்கரவாதக் குழு ஒன்றின் அழுத்தத்துக்குப் பணிந்துபோக இந்தியா சிறிய நாடு அல்ல என்று தெரிவித்த அந்த அதிகாரி, பெரும்பான்மை சிங்களவர்களினால் தமிழர்கள் ஒடுக்கப்படுபவர்களாகவே ஐரோப்பிய ஒன்றியம் பார்க்கிறது என்று கூறினார்.

ஜி.எஸ்.பி. ஏற்றுமதிச் சலுகையை நீடிக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்தைக் கேட்டுக் கொள்வதில் இலங்கை பெரும் சவாலை எதிர்நோக்கி உள்ளது. இலங்கையில் ஆயிரக்கணக்கானோரின் தொழில் வாய்ப்பைக் காப்பாற்றுவதற்கு இந்தச் சலுகை அவசியம் என்றும் அவர் சொன்னார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய நிலைப்பாட்டுக்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் உள்ள கவுன்ஸில்களுக்கும் ஆட்சி மன்றங்களுக்கும் தெரிவான தமிழர்களின் அழுத்தமே காரணமாக இருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

ஜி.எஸ்.பி. சலுகையை ரத்துச் செய்வதன் மூலமும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை நிறுத்துவதன் மூலமும் விடுதலைப் புலிகளின் ஆயுள் மேலும் பத்து ஆண்டுகளால் அதிகரிப்பதை ஐரோப்பிய ஒன்றியம் உணரவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பிரதம கொறடா பதவிக்கு தினேஷ்?

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் மறைவினால் வெற்றிடமாகியுள்ள நாடாளுமன்றத்தில் அரச கட்சியின் பிரதான கொறடா பதவிக்கு இரண்டு அமைச்சர்களின் பெயர்கள் அடிபடுகின்றன.

அரச கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் நிலையியற் கட்டளை தொடர்பாகப் பரந்த அனுபவமுள்ளவருமான அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் பெயர் அரசில் பிரபலமிக்கவர்களால் ஜனாதிபதிக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே ஐ.தே.க. அரசின் காலத்தில் அரச கட்சியின் பிரதான கொறடாவாகப் பதவி வகித்து அனுபவம் வாய்ந்த அமைச்சரான மஹிந்த சமரசிங்கவின் பெயரும் இப்பதவிக்கு முன்வைக்கப்பட்டுள்ளதாக அரச உயர் மட்டத்திலிருந்து தெரியவந்துள்ளது.



மல்லாவியில் நேற்று இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் அருட்திரு கருணாரட்ணம் அடிகளாரின் பூதவுடல் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த போது எடுக்கப்பட்ட படம்.

## தேர்தல் பிரசாரம் மைத்திரிபால பொறுப்பில்

கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் நடவடிக்கைகளின் பொறுப்புகளை அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்க கட்சி தீர்மானித்துள்ளது.

இந்தப் பொறுப்பு இதற்கு முன்னர் காலஞ்சென்ற ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேக்கு வழங் கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வெளிநாடு சென்றுள் ளதாகவும் அவர் நாடு திரும்பிய வுடன் இந்தப் பொறுப்பு அவருக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதி மற்றும் இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றொனால்ட் றீகனின் ஆட்சிக் காலத்தில் பிரதி சட்டமா அதிபராகப் பணியாற்றியவர் ப்ரூஸ் பெய்ன்.

தமக்குக் கீழே உள்ளோர் மேற்கொண்ட நடவடிக்கைகள் தெரிந்தும் அவற்றைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்காதமை குறித்து குற்றப் பத்திரிகையில் குற்றச்சாட்டுகள் இடம்பெற உள்ளன.

அமெரிக்க குடியுரிமை பெற்றவரான கோத்தபாய ராஜபக்ஷ, அமெரிக்காவின் பச்சை அட்டை பெற்றவர்களான பசில் ராஜபக்ஷ மற்றும் சரத் பொன்சேகா உள்ளிட்டோருக்கு எதிராக அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தப்படவுள்ளது. (அ)

## கருணாரட்ணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்பகுதியிலேயே உள்ளது எனவும் - தாக்குதல் அவரை இலக்குவைத்தே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியின் முக்கிய மனித உரிமைப் பணியாளராகத் திகழ்ந்த கருணாரட்ணம் அடிகளார் வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தை ஜோஸப் பரராஜசிங்கம், சந்திரநேரு போன்றோருடன் சேர்ந்து ஆரம்பித்தார்.

வடக்கு - கிழக்கு மக்களின் மனித உரிமைகளுக்காக வன்னியிலிருந்து குரல் எழுப்பி வந்த கருணாரட்ணம் அடிகளார் 2004 இல் வடக்கு - கிழக்கு மனித உரிமை செயலகத்தின் பிரதிநிதிகளுடன் ஜெனிவாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இந்த விஜயத்தின்போது அவர் பல ஐரோப்பிய அமைப்புகளைச் சந்தித்திருந்தார்.

வடக்கு- கிழக்கு மனித உரிமை செயலகக் குழுவுக்குத் தலைமையேற்றுச் சென்ற அவர் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு புரியும் மனித உரிமை மீறல்கள் குறித்து அனைத்துலக நாட்டுப் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு- கிழக்கு மனித உரிமைகள் நிறுவனத்தின் முதன்மை செயற்பாட்டாளராக விளங்கிய 'மாமனிதர்' அரியநாயகம் சந்திரநேரு 2005ஆம் ஆண்டில் மட்டக்களப்பில் இலங்கைப் படையின் துணைக்குழுவினரால் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார் என்பதும்-

அந்த அமைப்பின் உறுப்பினர்களில் ஒருவரான 'மாமனிதர்' ஜோசப் பரராஜசிங்கம் 2005ஆம் ஆண்டு மட்டக்களப்பில் நத்தார் நாள் வழிபாட்டின்போது சுட்டுக்கொல்லப்பட்டார் என்பதும் தெரிந்தவையே. (அ)

## நளினியின் மகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூத்த இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நளினியின் மகளைக் கண்காணிப்பதற்கு இந்தியப் புலனாய்வு அமைப்புகள் தவறியுள்ளமை 'றோ'வுக்கு ஏற்பட்ட பெரும் தோல்வி எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ரஜீவ்காந்தி கொலை வழக்கில் நளினியும் முருகனும் குற்றம் சாட்டப்பட்ட பின்னர் தமிழ்நாடு சிறையில் மேஹரா பிறந்தமை குறிப்பிடத்தக்கது. மேஹரா சில வருடங்கள் தனது தாயாருடன் சிறையில் வாழ்ந்தார்.

எனினும் நளினிக்கும் முருகனுக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேஹராவை முருகனின் தாயார் பொறுப்பேற்றார்.

மேஹரா சிறுமியாக இருந்தவேளை இலங்கை கடவுச்சீட்டில் அவர் இந்தியாவுக்கு வெளியே கொண்டுசெல்லப்பட்டார்.

மேஹராவின் குடியுரிமை குறித்த விவாதம் இன்னமும் இந்திய நீதிமன்றங்களில் காணப்படுகின்றது.

நளினி இந்தியப் பிரஜை என்பதால் மேஹராவும் பிறப்பால் இந்தியப் பிரஜையே எனத் தெரிவிக்கப்படுவதை இந்திய அதிகாரிகள் ஏற்க மறுக்கின்றனர்.

மேலும் மேஹரா தனது பெற்றோரைச் சந்திப்பதற்கும் இந்திய அதிகாரிகள் அனுமதி வழங்க மறுத்து வந்துள்ளனர்.

அதேசமயம், மேஹரா தற்போது 10 ஆம் வகுப்பில் கல்வி கற்கிறார் என்றும் - தனது தந்தையின் சகோதரருடன் லண்டனில் வசிக்கிறார் என்றும் - மருத்துவராக வர விரும்புகிறார் என்றும் - ஒரு தகவல் தெரிவிக்கிறது. (அ-சி)

## கிராமசேவையாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த இருவரால் சுட்டுக்கொல்லப்பட்டனர் எனவும் சம்பவம் தொடர்பாக தெரிவிக்கப்படுகிறது.

மனைவி அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார் எனவும் கணவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மரணமானார் எனவும் கல்முனைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். கொலையாளிகளோ கொலைக்கான பின்னணியோ தமது ஆரம்ப விசாரணைகளின் போது கண்டறியப்படவில்லையெனவும் கல்முனைப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## இலங்கைக்கான இஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்குத் தெரிவிக்கப்பட்டது என்றும் அறியப்படுகிறது.

பிரதமர் மார்ச் 26 ஆம் திகதி இலங்கை திரும்பியிருக்க வேண்டும். எனினும் 28ஆம் திகதிவரை இஸ்ரேலில் தங்கி இருந்து இஸ்ரேலில் உள்ள வேறு ஆயுத தளபாட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு முயற்சித்தார் என்றும் அதுவும் கைகூடாமல் போய்விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஈரான் விஜயத்தின் பின்பே இலங்கை தொடர்பான இஸ்ரேலின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக் கடற்படைக்குத் தேவையான பெருமளவு இராணுவ உதிரிப் பாகங்களையும் இஸ்ரேல் நிறுத்தி வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## இராணுவத்தினரின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாங்குளம் கோவில்பற்றில் நடைபெற்ற ஆராதனை ஒன்றில் பங்கேற்றுவிட்டு, திரும்பிக்கொண்டிருந்தவேளையில், இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணி, கருணாரட்ணம் அடிகளாரை இலக்கு வைத்து கிளைமோர் தாக்குதலை நடத்திக் கொன்றிருக்கிறது - என்று இளந்திரையன் கூறியிருக்கிறார்.

இராணுவம் மறுப்பு

இது குறித்து 'ரொய்ட்டர்ஸ்' செய்தியாளர், இலங்கை இராணுவத்தின் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்காரவிடம் கேட்டபோது, அவர் அதனை மறுத்தார்.

கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்ட இடம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே உள்ளது. அந்தளவு தூரத்திற்குச் சென்று எமது படைகள் செயற்படுவதில்லை-

நிச்சயமாக, விடுதலைப் புலிகளின் அல்லது அவர்களிடமிருந்து முரண்பட்டுப் பிரிந்த தரப்பு ஒன்றே அருட்தந்தையைக் கொலை செய்திருக்கிறது - என்று அவர் சொன்னார். (அ)

## அரிசிக் கடைகளு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு செல்லவுள்ளது.

இன்று பகல் 2.30 மணிக்கு கொழும்பு 07, கேம்பிரிஜ் டெரெஸில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இருந்து ஐதேகட்சிக்குழுவினர் புறப்படுகின்றனர்.

கொழும்பு புறக்கோட்டை உள்ளிட்ட பல இடங்களுக்குச் சென்று அரிசி தொடர்பான உண்மை நிலையை இக்குழுவினர் ஆராய்வர் என்று அக்கட்சி தெரிவித்துள்ளது.

## இலங்கைமீது தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

இலங்கை மீது கனடா பொருளாதார இராஜதந்திரத் தடைகளை விதிப்பது குறித்துப் பரிசீலிக்க வேண்டும் என்றும் -

வெளிநாட்டு உதவிகளை மனித உரிமை நிலைவர முன்னேற்றத்துடன் தொடர்புபடுத்த வேண்டும் என்றும் - கோரப்பட்டுள்ளது.

பல நாடுகளின் மோதல்களுக்குத் தீர்வு காண்பதற்கு கனடா பொதுநலவாய அமைப்பை நாடியுள்ளது எனத் தெரிவித்துள்ள கொன்சவேட்டிவ் கட்சியின் வேட்பாளர் ஒருவர், இலங்கையில் வன்முறைகளையும் கலவரங்களையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்கான தருணம் இது என்று தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தின் ஆட்சியை வெற்றிகரமாக அகற்றியுள்ளது. அரசை எதிர்க்கும் நீதிபதிகள் அகற்றப்படுகின்றனர்; பத்திரிகையாளர்கள் மிரட்டப்படுகின்றனர்; எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கொல்லப்படுகின்றனர் - என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)


**Subra (14)**
**சித்தன்கேணி**

**2010 A/L புதிய பிரிவு ஆரம்பம்**

**23/04/2008 4.00 pm (புதன்)**

**கலை**
Tam குழந்தை
log E.S. பவன்
Dra கணேஸ்
H.C சந்திரன்
P.Sc அசோக்
Hist ஜெயக்குமார்
Geo ஐங்கரன்
Mus நுசந்தா
Dan விரலட்சுமி
Cristi அன்டனி
Agr அமுதன்
Stats தவசேகர்

**வர்த்தகம்**
Bus,Stu- நந்தீஸ்
Accounts-சுபோசன் -சீலன்
Eco-ஜெயராம் - S.Sசிறி

**கணித, விஞ்ஞானம்**
C.Mat- U.குணம்
Phy - சன்
Che - கண்ணதாசன்
Bio - சுரேந்திரன்

Eng- சந்திரவெளலி
C.G.N-தவசேகர்
I.C.T- சிசி

★ 2007 கணிதப்பிரிவு 3A - (1)
★ வர்த்தக பிரிவு - 3A-(1)
★ கலைப்பிரிவு- 3A- (2) பேர்
★ மீள் பரீச்சார்த்திகளுக்கு விசேட கணித, ஆங்கில O/L வகுப்புகள் நடைபெறுகின்றன.

★ வலி மேற்கில் தனித்துவமான அனுபவமான ஆசிரியர்குழு
★ தனிப்பாட அனுமதி வழங்கப்படும்
★ வாரத்தில் ஒவ்வொரு பாடமும் 4 மணிநேர வகுப்புகள்
★ கடந்தகால பெறுபேறே எமது வெளிப்பாடு.



**தொடர் பரீட்சையும் கருத்தரங்கும்**

**பொருளியல்** N.B.கஜிதரன்

**கணக்கீடு** P.பகீரதன்

**மாணவர் கவனத்திற்கு!**

- பரீட்சைகள் அனைத்தும் மாதிரிப் பரீட்சைகளாகவே நடைபெறும்.
- பரீட்சைக்குரிய பதிவுகள் அனைத்தையும் ஆசிரியர்கள் கற்பிக்கும் கல்வி நிலையங்களிலேயே முன்கூட்டியே மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
- வெளி மாணவர்கள் தமது பதிவுகளினை விக்னா, நாவலர் கல்வி நிலையங்களில் முன்கூட்டியே மேற்கொள்ளுதல் வேண்டும்.
- பரீட்சைகளில் ஏனைய மாவட்ட முன்னணி ஆசிரியர்களின் பரீட்சை வினாக்களும் ஆசிரியர்களினால் பரிசீலிக்கப்பட்டு உள்ளடக்கப்படும்.
- பரீட்சைகள் அனைத்தும் விக்னா மற்றும் நாவலர் கல்வி நிறுவனங்களில் மட்டும் நடைபெறும்.
- பரீட்சைக்கான விடை பளிக்கும் தாள்கள் பரீட்சைப் பிரிவினரால் புத்த வடிவில் வழங்கப்படும்.
- ஒவ்வொரு பரீட்சைக்குமான கருத்தரங்குகள் ஆசிரியரினால் உடனுக்குடன் நடத்தப்படும்.
- கடந்த வருடம் ஆசிரியர்களினால் நடத்தப்பட்ட தொடர் பரீட்சை மற்றும் கருத்தரங்குகளில் பங்குபற்றி மாணவர்கள் முன்னணிப் பெறுபேறு பெற்றமை குறிப்பிடத்தக்கது.
- மொத்தத்தில் மாணவர்களே! நீங்கள் கற்றதை மீட்டுப்பார்க்கும் ஓர் மாபெரும் களம் இப்பரீட்சைகள் மற்றும் கருத்தரங்குகள் ஆகும்.
- A/L 2008 இல் "3A" சித்தியே உங்கள் நோக்கம், அதுவே எங்கள் ஆத்ம திருப்தி

**பரீட்சைக் கட்டணம்**

★ அனைத்து பரீட்சைகள் மற்றும் கருத்தரங்குகளுக்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ரூபா 400 ஆகும்.
★ இரண்டு பரீட்சையிலும் தோற்றும் மாணவர்களுக்கு மொத்தக் கட்டணத்தில் 10% சலுகை வழங்கப்படும்.

**அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளும் முடிவு திகதி ஏப்ரல் 30**

**பொருளியல்**

| இல | நாள் | பாடம் |
|---|---|---|
| 01 | மே 05 | Eco - I |
| 02 | மே 19 | Eco - II |
| 03 | யூன் 05 | Eco - I |
| 04 | யூன் 20 | Eco - II |
| 05 | யூலை 01 | Eco - I |
| 06 | யூலை 16 | Eco - II |

**கணக்கீடு**

| இல | நாள் | பாடம் |
|---|---|---|
| 01 | மே 01 | Acc - I |
| 02 | மே 20 | Acc - II |
| 03 | யூன் 03 | Acc - I |
| 04 | யூன் 18 | Acc - II |
| 05 | யூலை 02 | Acc - I |
| 06 | யூலை 17 | Acc - II |


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.04.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org